15வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
☎ 416-282-8059 📠 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்

OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 23 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | DECEMBER 15, 2005


கருத்துரிமை 04


மதுபோதையில் வாகனம் செலுத்துதல் 09


தெரிவுகள் 13

## நோர்வே இல்லாமல் பேச்சுவார்த்தை இல்லை

கொழும்பில் இலங்கை அரசாங்கத்திற்கும், நோர்வே தூதுவருக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. சமாதான பேச்சுகள் தொடர்பாக சில புதிய யோசனைகளை அச்சமயம் நோர்வே முன்வைத்துள்ளது. நோர்வேயின் அமைதி முயற்சிக்கான புதிய கொள்கைகளை ஏற்க முடியாது என்றும் இலங்கை அரசு திட்டவட்டமாக கூறிவிட்டது.

அச்சந்திப்பின் போது இலங்கை அரசாங்கம் நோர்வேக்கு பல நிபந்தனைகள் விதித்துள்ளதாக தெரியவந்துள்ளது. நோர்வேயின் நிகழ்சிநிரலின் படி அல்லாமல் இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலின் படியும், நிபந்தனைகளின் படியுமே நோர்வே செயற்படவேண்டும் என்றும் அமைதிப் பேச்சுவார்த்தை தொடர்பான உள்ளடக்கங்களை ஊடகங்களுக்கு தெரிவிக்கக் கூடாது என்றும் நோர்வேயிற்கு கூறப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தத்தில் சமாதான அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேயை சுதந்திரமாகவும், நீதியாகவும் செயல்பட முடியாது தடுக்கின்ற வேலையை செய்ய ஆரம்பித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் செயலாளர், மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் ஆகியோரை நோர்வே தூதுவர் தனித்தனியாக சந்தித்த போதே இலங்கை அரசின் காட்டுமான நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் நோர்வேயின் சமாதான முயற்சிகள் பற்றி அரசு பக்கம் இருந்து அநாகரிகமான முறையில் விமர்ச்சிக்கப்படுவதை அரசு கட்டுப்படுத்தாதவரை இந்த சமாதான முயற்சியில் நோர்வே இறங்காது என்று நோர்வே இவர்களிடம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளது.

நிலைமை இவ்வாறு இருக்க நோர்வேயில்லாமல் பேச்சுவார்த்தையே கிடையாது என்று புலிகள் திட்டவட்டமாக கூறியுள்ளனர்.

# கனடியத் தலைவர்களும் அமெரிக்கத் தலைவரும்

புஷ் இன் ஆத்ம நண்பன் ஸ்ரீபன் காப்பர் (Stephen Harper)



"கனடா தரப்போகும் பரிசு" என்ற தலைப்பில் அமெரிக்காவின் பிரபல பத்திரிகைகளில் ஒன்றான "வாஷிங்டன் ரைம்ஸ்" (Washington Times) இனுடைய மார்கழி இரண்டாம் திகதிய பதிப்பில் பற்றிக் (Patrick Basham) என்பவர் எழுதிய கட்டுரை இது.

திறந்த பொருளாதார நிபுணரும் கன்ஸ்வேர்ட்டிக் கட்சியின் தலைவருமான ஸ்ரீபன் காப்பர் கனடாவின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் அவர் ரோனி பிளையரை பார்க்கிலும் புஷ் இன் ஆத்ம நண்பராக விளங்குவார். ஸ்ரீபன் காப்பரின் கொள்கைகளும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இனுடைய கொள்கைகளும் ஒத்துப்போகின்றன. ஸ்ரீபன் காப்பர் அமெரிக்க சுதந்திர வர்த்தகத்திற்கு ஆதரவாளர், ஈராக் யுத்தத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர், கொயோட்டா (Kyoto) இல் எடுக்கப்பட்ட மாசு கட்டுப்படுத்தும் கொள்கைகளுக்கு எதிரானவர். மற்றும் புஷ் ஐ போல் சொந்தப் பழக்கவழக்கங்களிலும் பழமைவாதக் கொள்கையை கடைப் பிடிப்பவர் என்கிறது இப்பத்திரிகை.

ஸ்ரீபன் காப்பர் கனடாவின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் அவர் புஷ் இன் ஆத்ம நண்பனாக திகழ்வதோடு புஷ் இன் கொள்கைகளை உலக அரங்கில் பரப்புபவராகவும் தொடர்ச்சி 02ம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# "கடன் கடன் கடன்"

## வாழ்வில் வெற்றி பெற

முதல் கடன் அட்டை (credit card) கிடைப்பது சற்றே சிரமமான காரியம். பிறகு கடன் அட்டை என்பது தண்ணீர் பட்ட பாடு. தினமும் தபாலில் யாரோ ஒருவர் கடன் அட்டை தருவதாகக் கடிதம் அனுப்பிக் கொண்டே இருக்கக் காணலாம்.

கடன் அட்டை இல்லாமல் கடன் சரிதம் உருவாகாது. கடன் அட்டை நிறைய இருந்து சரிவர தவணைப்படி பணம் கட்டியிருக்கவில்லை என்றால் கடன் முற்றிலும் பழுது பட்டுவிடும். இத்தகைய இரண்டு சூழ்நிலைகளிலும் கடன், வங்கியிலோ, பிறஇடங்களிலோ பெறுவது என்பது இயலாத காரியம் ஆகிவிடும். அல்லது கூடுதல் வட்டி கொடுத்து கடன் பெற வேண்டியிருக்கும்.

பலபேர் ஒன்றுக்கு மேற்பட்ட கடன் அட்டைகள் வைத்திருக்கிறார்கள். எல்லா வற்றிலும் முழுதும் பணம் எடுத்திருப்பார்கள் அல்லது செலவழித்திருப்பார்கள். குறைந்த தவணைப் பணத்தை மட்டும் மாதாமாதம் கட்டி வருவார்கள் அல்லது அதையும் கூட கட்டாமல் விட்டு விடுவார்கள். இத்தகையோர் வாழ்வில் உயர்வது என்பது கடினம், மிகக் கடினம். ஏனென்றால் பொருளாதார ரீதியில் பலரையும் முன்னேற விட்டாமல் பின்னடையச் செய்வது கடன் அட்டைகளே இவ்வாறு கடன் அட்டைகளைக் கையாள்வதே பின்னடை வுக்குக் காரணம்.

இரத்தினசிங்கம் என்று ஒருவர் என்னிடம் வந்தார். அவர் சொன்னது இதுதான். கடன் அட்டைகளில் மொத்தம் 30,000 டொலர் பாக்கி உள்ளது. குறைந்த தவணைப்பணத்தையே மாதாமாதம் கட்டி வருகின்றேன். என்ன செய்யலாம்?

நான் அவருக்குச் சொன்ன பதில், அவரைப்போன்ற சூழ்நிலையில் உள்ள பலருக்கும் உபயோகமாக இருக்கும் என்பதால் இங்கே தருகின்றேன். பதில் இதோ. உங்கள் சக்திக்கு மீறி நீங்கள் பொருள் வாங்க செலவழித்த 30,000 டொலர் உங்களைக் கொல்லவில்லை. அதற்காக நீங்கள் கட்டுகிறீர்கள். பாருங்கள் வட்டி, அதுதான் உங்களைக் கொல்கிறது. சராசரியாக எல்லா கடன் அட்டைகளுக்கும் சேர்த்துக் கட்டும் வட்டி 19.98 சதவீதம். இதற்குக் கட்ட வேண்டிய குறைந்த பட்ச மாதத் தொகை 750 டொலர். இதில் வட்டிக்கு என காட்டும் தொகை மட்டுமே 500 டொலர் அப்படியானால் 30,000 க்குக் கட்டும் வருட வட்டி 6,000டொலர். இந்த 6,000 டொலர் வட்டி கொடுக்க சம்பாதிக்க வேண்டியது எவ்வளவு தெரியுமா? 10,000 டொலர், இந்த 4,000 டொலர் கட்டாயப் பிடித்தங்களுக்கும், வரிக்கும் என போய் விடுகின்றது. இதிலிருந்து புரிகின்றதா? என்ன செய்ய வேண்டும் என்று? வட்டியைக் குறைக்க வேண்டும் சரி எப்படி? அதற்கு முன் ஒரு விவரத்தை உங்களுக்குச் சொல்லி விடுகின்றேன். 10,000 டொலரை 19.98 வட்டிவீதத்தில் மாதந்தோறும் குறைந்த தவணைப் பணத்தை மட்டும் கட்டி வந்தால் முழுவதுமாக கட்டிமுடிக்க எத்தனை ஆண்டுகள் ஆகும் தெரியுமா?

தலையைச் சொறிய வேண்டாம். விடை இதோ. 37 வருடங்களுக்கு மேல் ஆகும். வட்டியில் கட்டிய தொகை மட்டும் 19,000 டொலருக்கு மேல் இருக்கும். ஆக 10,000 வாங்கி விட்டு கொஞ்சம் கொஞ்சமாக அசலும் வட்டியுமாக 19.98 சதவீதத்தில் குறைந்த மாதத்தவணையை மட்டும் கட்டி முழுவதும் கடனை முடிக்க ஆன காலம் 37 வருடங்கள். மொத்தம் அசலும் வட்டியுமாக திரும்பச் செலுத்திய தொகை 29,000 டொலர். இது தேவைதானா?

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். குறைந்த தவணையை மட்டும் மாதந்தோறும் கட்டி கடனிலிருந்து முழுவதுமாக விடுபட முடியாது. பல நிறுவனங்கள்/ திணைக் கழகங்கள் (Department) அல்லது கடைகளின் அட்டைகள் வட்டி 29சதவீதம் வரை வசூலிக்கின்றன. நீங்கள் அத்தகைய அட்டைகளில் கடன் வைத்திருந்தால் உங்கள் நிலை இன்னும் பரிதாபத்திற்குரியது.

கடன் எப்போது வாங்கலாம்? ஓர் எளிய பதில். கடனில் வாங்கிய பொருளின் மதிப்பு அதிகரிக்கும் என்றால் கடன் வாங்கலாம். உதாரணம் வீடு. அப்படி வீட்டிற்கே கடன் வாங்கியிருந்தால் கூட கடனைக் குறைக்கத் தகுந்த தவணைப் பணத்தைச் செலுத்தி வருவது தான் புத்திசாலித்தனம்.

ஆக இதிலிருந்து என்ன தெரிகின்றது. கடன் உங்கள் எதிரியல்ல. வட்டிதான் உங்கள் எதிரி. தேவையில்லாத கடனை ஒரு போதும் வாங்கக் கூடாது. சுயகட்டுப்பாடு மிகவும் தேவை. சரி இப்போது வட்டியைக் எப்படிக் குறைக்கலாம் என்பதற்குச் சில ஆலோசனைகளைச் சொல்வோம்.

1. உங்கள் கடன் அட்டை நிறுவனத்துக்கு அழைத்து பிற இடங்களில் இருந்து குறைந்த வட்டிக்கு கடன் அட்டை தருவதாக கடிதம் வந்துள்ளது. அதேபோல அவர்களும் (அதாவது உங்கள் கடன் அட்டை கம்பெனியும்) வட்டியைக் குறைக்க முடியுமா? என்று கேட்கலாம். உதாரணத்துக்கு மற்ற இடத்திலிருந்து வந்த கடிதம் 10 சதம் வட்டி தருவதாகச் சொல்லலாம். பலசமயங்களில் உங்கள் வியாபாரத்தை இழக்க விரும்பாமல் கடன் அட்டை கம்பெனி வட்டியைக் குறைக்கலாம். அல்லது நல்லதொரு மாற்று ஆலோசனையைத் தரக்கூடும்.

**பெரி. முத்துராமன்**

2. நாட்டு நடப்பைத் தெரிந்து கொள்ள பின்வரும் இணைய தளங்கள் உதவியாக இருக்கும்.
www.canadian credit center.com
www.bankrate.com/can
www.eyeone credit.com/canada

இந்த இணையதளங்களில் அவ்வவ் போது குறைந்த வட்டிக்கு கடன் அட்டை தரும் கம்பெனிகளின் விவரங்களும் இருக்கக்கூடும். உங்களுடைய கடன் அட்டை கம்பெனி வட்டியைக் குறைக்க மறுத்தால், உங்கள் கடன் அட்டை இருப்புத் தொகையை இவ்வாறு குறைந்த வட்டி தரும் மற்றொரு கம்பெனிக்கு மாற்ற இந்த இணையதள விவரங்கள் உபயோகமாக இருக்கும்.

3. வங்கிகளை அணுகி, கடன் முழுவதையும் ஒருங்கிணைத்து ஒரே கடன் ஆக்க முடியுமா என்று கேட்டு பாருங்கள். அப்படி ஆக்க முடிந்தால் வட்டி மட்டுமன்றி, கட்டும் மாதத் தவணையும் கூட குறையும்.



# கனடியத் தலைவர்களும் ...

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

திகழ்வார் என்கிறது இந்தப் பத்திரிகை. அமெரிக்கா, கனடாவின் முக்கிய ஏற்றுமதி பொருளான மரங்களின் (Soft wood Lumber) ஏற்றுமதிக்கு சுதந்திர வர்த்தக விதிகளை மீறி வரி அறவிட்டது. இதற்கு எதிராக தற்போதைய கனடிய அரசு தொடர்ந்த வழக்கில் அமெரிக்கா தோல்வி யுற்றதுமல்லாமல் இதில் விதிக்கப்பட்ட தீர்ப்பான ஐநூறு கோடி டொலர் (5 பில்லியன்) நட்ட ஈட்டையும் கனடாவிற்கு கட்ட மறுக்கிறது. இது விடயத்தில் போல் மாட்டின் மிகவும் தீவிரமாக இருந்தும் ஸ்ரீபன் காப்பர் தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது ஸ்ரீபன் காப்பர் அமெரிக்காவிற்கு ஆதரவாக செயற்படுவதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஈராக் போரில் ஸ்ரீபன் காப்பர் அமெரிக்காவிற்கு ஆதரவாக பாரளு மன்றத்தில் பேசியது குறிப்பிடத்தக்கது. கொயோட்டாவில் 1997 இல் நடைபெற்ற மாசு கட்டுப்படுத்துதல் தொடர்பான உலக மாநாட்டில் 146 நாடுகள் பங்குபற்றின. அங்கு எடுக்கப்பட்ட மாசு கட்டுப்படுத்தும் தீர்மானத்தில் கனடா உட்பட பல நாடுகள் கைச்சாத்து இட்டன. ஆனால் அமெரிக்கா இந்த மாசு கட்டுப்படுத்தும் தீர்மானத்தில் கைச்சாத்திட மறுத்து விட்டது.



அமெரிக்கா தான் இத் தீர்மானத்தில் கைச்சாத்திட்டால் தனது தொழிற்சாலைகளுக்கு பெரிய பொருளாதார நட்டம் ஏற்படும் என்று கூறியது. ஸ்ரீபன் காப்பரும் இக் கொயோட்டா தீர்மானத்தால் கனடாவிற்கு பெரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் என்று கூறிவருவது தெரிந்ததே.

ஓர் இனத்திருமணங்களை ஜோர்ஜ் புஷ் அங்கீகரிக்கவில்லை. அதேபோல் ஸ்ரீபன் காப்பரும் கனடாவின் உயர்நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டதும் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டதுமான ஓரின திருமணங்களை தான் பதவிக்கு வந்தால் சட்டபூர்வமற்றதாக மாற்றுவதற்கு பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை மீள சமர்ப்பிப்பேன் என்று கூறி வருகிறார். இவற்றை கருத்தில் கொண்டே "வாஷிங்டன் ரைம்ஸ்" புஷ் இன் ஆத்ம நண்பர் ஸ்ரீபன் காப்பர் திகழ்வார் என்று கூறுகிறது.

கனடாவின் மிகப்பெரிய தொழிலாளர் சங்கமான CAW (Canadian auto workers union) இனுடைய தலைவரான பஸ் (Buzz Hargrove) புதிய ஜனநாயக கட்சிக்கு (NDP) தீவிர ஆதரவு அளித்து வரும் தனது தொழிற்சங்கத்தையும் அதன் உறுப்பினர்களையும் இம்முறை தேர்தலில் பெரும் போட்டி நடைபெறும் தொகுதிகளில் தொழிற்கட்சிக்கு (Liberal) வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்வாறு சாதுர்யமாக (Strategy Voting) வாக்களிப்பதன் மூலம் ஒரு தீவிர வலது சாரி அரசாங்கம் பதவிக்கு வருவதை தடுக்க வேண்டும் என்கிறார் பஸ். இப்படியாக தான் கூறுவதால் தானோ அல்லது தனது சங்கமோ புதிய ஜனநாயகக்கட்சிக்கு ஆதரவு இல்லை என்று கருதக்கூடாது என்று இவர் கூறுகிறார்.

மூலம் - CBC News

# இந்திய நாடாளுமன்றம்

இந்தியாவின் வரலாறு காணாத வகையில், நாடாளுமன்றத்தில் கேள்விநேரத்தில் கேள்வி கேட்க 11 உறுப்பினர்கள் லஞ்சம் பெற்றுள்ளனர். பிரபல "ஆஜ்தக்" தொலைக்காட்சி நிறுவனம் இதை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் கேள்வி கேட்க கேள்விநேரம் என்று தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், கேட்கப்படும் கேள்விகளைப் பற்றி முன்கூட்டியே கூறிவிடவேண்டும். அந்தக் கேள்விகள் எழுப்பப்படும்போது மற்ற உறுப்பினர்கள் துணைக் கேள்விகளை எழுப்பலாம். அவற்றுக்கும் அமைச்சர்கள் பதில் அளிப்பார்கள். பெரும்பாலான உறுப்பினர்கள் தங்களின் தொகுதி, மாநிலப் பிரச்சினைகளைப் பற்றியே கேள்வி எழுப்புவார்கள். இந்த நடைமுறையில், பெரிய கம்பெனிகள் தங்களுக்குச் சாதகமாக கேள்வி கேட்க வைப்பதற்காக லஞ்சம் தருவதாகக் கூறப்படுகிறது. இதை ஆதாரத்துடன் நிரூபிக்க ஆஜ்தக் தொலைக்காட்சி களம் இறங்கியது.

அக்குழுவினரின் பொறியில் காங்கிரஸ், பாஜக உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிக்கினர். கம்பெனி பிரதிநிதிகள் போல நடித்த ஆஜ்தக் குழுவினரிடம், அவர்கள் பத்தாயிரக்கணக்கில் லஞ்சம் கேட்டது வீடியோ படமாக தெளிவாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

என்னென்ன கேள்விகளைக் கேட்கவேண்டும் என்ற குறிப்புடன் பணக்கட்டுகளை ஆஜ்தக்

விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# ரொறொன்ரோ கல்விச் சபைத் தமிழ்ப் பாடநூல்கள்

## பரமார்த்த குருவும் சீடர்களும்

*(1) முதலாவதாக, மேற்படி கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளதுபோல ரொறன்ரோ கல்விச் சபையானது தமிழ்ப் பாட நூல் (Text Book) எதனையும் வெளியிடவில்லை. ரொறன்ரோ கல்விச் சபையானது தமிழ்ப் பயிற்சி நூலையே (Tamil Work Book) வெளியிட்டுள்ளது. பாடநூல் எனில் அதனைப் பலரும் படிக்கலாம். அது நெடுவாழ்வுத்தன்மை கொண்டதாக இருக்கும். பயிற்சி நூலில் மாணவர் எழுத்துப் பயிற்சிகளைச் செய்வர். ஆதலால் ஒரு மாணவன் /மாணவி பயன்படுத்துவதோடு அதன் வாழ்நாள் முடிந்துவிடும்.*

*(2) இரண்டாவதாக, பாடங்களை ஒளிப்படி எடுத்துக் கட்டிப் புத்தகமாகக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். முன்பு கூறியவாறு இது பாடநூல் அல்ல, பயிற்சிநூல் ஆகும். பயிற்சி நூலின் வாழ்நாள் குறுகியது. ஒரு மாணவன்/மாணவி பயன்படுத்தியதும் அதன் வாழ்நாள் முடிந்துவிடும். அதனாலேயே கல்விச் சபை இந்த முறையில் செய்துள்ளது. மேலும் படங்கள் போட்டு பல நிறத்தில் நூல்செய்யப் பணம் தேவைப்படும். இதற்குக் கட்டுரையாளர் பணம் கொடுக்க அணியமாக இருந்தால் பல வண்ணத்தில் செய்யுமாறு கல்விச் சபையிடம் கேட்கலாம். பாடங்களை ஒளிப்படம் எடுத்து புத்தகமாகக் கட்டிக் கொடுக்கும் வழக்கமே தமிழ் வகுப்புத் தொடங்கிய காலம் முதல் நடைபெற்றுவருகின்றது. இது தமிழுக்கு மட்டுமல்ல, எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். பழைய பயிற்சி நூல்களை எடுத்துப் பார்த்தால் கட்டுரையாளருக்கு இது புரியும்.*

*(3) மூன்றாவதாக, "வரைபு" என்ற சொல்பற்றிக் கட்டுரையாளர் பெரிதும் குழம்பியிருக்கிறார். "வரைபு" என்றால் ஒரு சட்டத்தை இறுதியாக்க முன்பு, ஒரு நூலை இறுதியாக்குமுன்பு அதைப்பற்றி எழுத்துருவில் ஓர் ஆவணத்தை ஆக்கி, அதைத் தொடர்புடையோர்க்கு அனுப்பிவைப்பர். தொடர்புடையோர், அதிலுள்ள குறைநிறைகள்பற்றி தமக்கு ஆவணம் அனுப்பியோருக்குக் கூறலாம். உரியோர் அதை ஆய்வுசெய்து, தேவைப்படின் உரிய மாற்றங்கள் செய்வர். இந்த நோக்குடனேயே கல்விச் சபையும் தனது பயிற்சிப் புத்தகத்தில் (Draft) "வரைபு" என்று போட்டு தனது பயிற்சி நூலையும் ஆசிரியருக்கு அனுப்பியுள்ளது. ரொறன்ரோக் கல்விச் சபையில் கற்பிக்கும் ஆசிரியர் அனைவருக்கும் கல்விச்சபையின் முகவரி தெரியும். எனவே இந்த "வரைபு" தொடர்பான குறைநிறைகளைக் கல்விச் சபைக்குத் தெரிவிக்கலாம். அதைவிடுத்து செய்தித் தாளில் எழுதுவதால் எந்த நன்மையும் விளையப் போவதில்லை.*

*(4) நான்காவதாக, இந்தப் பயிற்சி நூல்களில் கூறப்பட்டுள்ள சொற்கள் ஆசிரியருக்குப் புரியவில்லை என்றும், அவர்கள் கொதித்துக்கொண்டு இருப்பதாகவும் இந்தக் கட்டுரையாளர் கூறியுள்ளார். தமிழ் கற்பிக்கும் ஆசிரியருக்கு நாள், அச்சம், கல், நாற்காலி, முதல்வர், பெட்டகம், மாந்தன், மரபுவழி, உடன்பிறப்பு, ஏதிலி, திருப்பிறப்பு, செருகேடு, குமுகம், குமுகாயம், அஞ்சலாளர், செவிலி, வெதும்பி, செய்தி இதழ், குவளை, கலம், நிலநெய், அரிமா, மணித்துளி, மாழை, பெருநிலம், பெருநீர், பேரலை, புவியதிர்வு, இன்னியம், கல்யானை முதலாய சொற்களுக்குப் பொருள் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இப்படிச் சொல்வது தமிழ் கற்பிக்கும் ஆசிரியரை அவமானப்படுத்துவதாக உள்ளதாகப் பல ஆசிரியர் கொதித்துப் போய் இருக்கின்றனர். இச்சொற்கள் கட்டுரையாளருக்குத் தெரியவில்லை என்றால் அவர் பத்தாம் வகுப்பில்கூடத் தமிழ் படிக்கவில்லை என்பதே பொருளாகும். மேற்படி சொற்களுக்குப் பொருள் விளங்கவில்லை என்று கூறுவோரைத் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிய விடலாமா என்பதைக் கல்விச் சபை ஆய்ந்தறிந்து முடிவுசெய்யவேண்டும்.*

*இக்கட்டுரையாளர் தனக்கு விளங்கவில்லை என்று குறிப்பிட்ட சொற்கள் யாவும், எமது தாயகத்திலும் தமிழ்நாட்டிலும் வெளியிடப்பெற்றுள்ள அனைத்துப் பாட நூல்களிலும் பயிற்சி நூல்களிலும் உள்ளன. மேலும் புலம்பெயர்ந்து அவுத்திரேலியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய பெரு நிலப்பரப்பிலுள்ள நாடுகளில் வாழும் மக்களுக்காக செருமானிய நாட்டில் வைத்து தமிழ் அறிஞரால் வெளியிடப்பெற்ற 1-8 வகுப்பு வரையான நூல்களிலும் உள்ளன. இந்தக் கட்டுரையாளர் நீண்ட காலமாக யாழ்ப்பாணப் பக்கம் போகாதவர்போலத் தெரிகின்றது. கடந்த பத்தாண்டுக்கு முன்பிருந்தே "குளிர்களி அகம்" என்று ஒரு கடை யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக இருக்கின்றது. யாழ்ப்பாண மருத்துவ மனைக்குள் செவிலியர் கல்லூரி, குறைந்தது 30 ஆண்டாக இருக்கிறது. இவருக்குச் "செவிலியர்" தெரியவில்லையாம்.*

> *2005 திசம்பர் 01ஆம் நாளிட்ட "விளம்பரம்" செய்தி இதழில் மேற்படி தலைப்பில் வெளி வந்த கட்டுரை தொடர்பான சில ஐயங்களைப் போக்கும் நோக்கோடு இக்கட்டுரை எழுதப் படுகின்றது.*

*இப்பொழுது மலிவான செலவுச் சீட்டுக் கிடைக்கிறது. ஒரு தடவை தாயகம் போய்ப் பார்த்துவந்தால் நிலைமை விளங்கும்.*

*(5) ஐந்தாவதாக, பயிற்சி நூலில் உயிர் எழுத்து, மெய் எழுத்து, பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச்சொல் மட்டும்தான் போட்டுள்ளனர் என்று கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கணத்தில், இவற்றை மட்டும் 1--8 வகுப்பு மாணவர் அறிந்திருந்தாலே அது பெரிய நிகழ்வாகும். அதைவிடக் கூடப் போகத் தேவையில்லை. நன்னூலே எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமேதான் விளக்கம் அளிக்கின்றதென்பது கட்டுரையாளருக்குத் தெரியாதுபோலும்.*

*(6) ஆறாவதாக, மேலும் இலக்கணம் ஒழுங்கில் இல்லையென்று இக்கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழியில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகை இலக்கணங்கள் உள்ளன. 12 வகுப்புவரையுள்ள மாணவருக்கு, எழுத்தும் சொல்லும் மட்டுமே கற்பிக்கலாம். அதற்கு மேலே பல்கலைக் கழக மட்டத்தில் மட்டத்தில் அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, அணி ஆகியவற்றைக் கற்பிக்கலாம். இதுவே எமது தாயகத்திலும் தமிழகத்திலும் உள்ள கற்பித்தல் முறையாகும். வழமையான பேசுதல், கேட்டல், வாசித்தல், எழுதுதல் வழியாக இந்தக் கற்பித்தல் மரபுக்கமைய முதலில் உயிர் எழுத்துகள், மெய்யெழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள், ஆய்த எழுத்து, பின்பு சொற்கள் (பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்), அடுத்து சொற்புணர்ச்சி, திணைகள் (உயர்திணை, அஃறிணை), பால் (ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்), எண் (ஒருமை, பன்மை), இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை), காலம் (இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம்) ஆகியவற்றையும், அதற்கடுத்து சொற்றொடர்கள் அமைப்பதுபற்றியும் மாணவர் அறியுமாறு பயிற்சிகள் போடப்பட்டுள்ளன. அத்தோடு ஆங்கில - தமிழ் ஆற்றல் பெறவும் பயிற்சிகள் ஆக்கப் பெற்றிருக்கின்றன. இதைத் தமிழ் தெரிந்த எவரும் மறுக்கமாட்டார். நிலைமை இவ்வாறு இருக்கயில், இலக்கணம் சரியில்லை என்று கூறுவது வேடிக்கையாக உள்ளது.*

*(7) ஏழாவதாக, இலக்கணங்களுக்கு விளக்கம் அளிக்கப் பெறவில்லை என்று கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். நான் முன்பு கூறியவாறு இது ஒரு பாட நூல் அல்ல, ஒரு பயிற்சி நூலாகும். பாடநூலாயின் கட்டுரையாளர் கூறியவாறு இலக்கண விளக்கங்கள் கொடுத்திருப்பர். பயிற்சி நூலில் அவை போடப்படுவதில்லை. மேலும், ரொறன்ரோ கல்விச் சபையில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியருக்கு எழுத்து, சொல், சொற்றொடர் பற்றிய அறிவு போதிய அளவு உண்டு. அவருக்கு இந்த விளக்கம் தேவை இல்லை. கட்டுரையாளருக்குத் தெரியவில்லையென்றால் ஒரு தமிழ் வகுப்பில் சேர்ந்து தமிழ் படிப்பது நன்மை பயக்கும்.*

*(8) எட்டாவதாக, ஆங்கிலத்தில் "பூட்சு" (boots), "சூசு" (shoes), "சிலிப்பர்சு" (slippers) எனக்கூறும் சொற்களுக்குத் தமிழில் சொற்கள் இல்லை: அதற்கு என்ன செய்வதென்று கேட்டுள்ளார். அவர் துயருறல் வேண்டாம். மேற்படி சொற்களுக்குத் தமிழில் புதையணி, காலணி, செருப்பு என்ற சொற்கள் 2000 ஆண்டாக வழக்கில் உள்ளன. தெரியாவிடின் பழந்தமிழ் நூல்களை வாசித்துப் பார்க்கலாம்.*

*(9) ஒன்பதாவதாக, கட்டுரையாளருக்கு "பியர்" (beer) "விசுக்கி" (whisky) "விறண்டி" (brandy) குடிக்காமற் போய்விடும், கள்ளுச் சாராயம்தான் குடிக்கவேண்டிவரும் என்ற கவலை மேலோங்கி இருக்கிறது. குடி குடியைக் கெடுக்கும். கள்ளுண்பார் நஞ்சுண்பவர் என்பதுதான் எமது நிலைப்பாடு. மதுவற்ற ஓர் ஒழுக்கமான குமுகாயத்தைக் காண விரும்புபவர் நாம். எனவே மது வகைகளைப்பற்றி எமக்குக் கவலை இல்லை.*

*(10) பத்தாவதாக, தமிழில் உள்ள அற இலக்கியங்களுள் தலையானது திருக்குறள் என்பதை அனைவரும் ஏற்றக்கொள்வர். தமிழர் மட்டுமன்றிப் பிறநாட்டு அறிஞரான வண. யு.சி. போப், வண. பெசுக்கி, வண. கால்டுவெல், வண. பேர்சிவல், முனைவர் அல்பேட் சுவைசர் போன்ற சான்றோரே இதைக் கூறியுள்ளனர். இத்தலையாய அற இலக்கியம், மாந்தன் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது. இதைப் போட்டது பிழை என்றால் கட்டுரையாளரது உளநிலைபற்றி ஆராய வேண்டித்தான் இருக்கிறது. நாலடியார், நான்மணிக்கடிகை, ஏலாதி, பஞ்சமூலம் உள்ளிட்ட பிற அற இலக்கியங்கள் 9-12 வரையுள்ள மாணவருக்குக் கற்பிக்கலாம், கற்பிக்கவும் பெறுகின்றதாக அறியமுடிகின்றது.*

*(11) பதினோராவதாக, கட்டுரையின் முன்பக்கத்தில் மாணவருக்குச் சொல்லே கூடிவிட்டது என்று கூறும் கட்டுரையாளர், இந்தச் சொற்களைப்போல பலமடங்கு கடினமான சொற்களையும் புணர்ச்சிகளையும் கொண்ட அற இலக்கியங்களைப் படிப்பிக்கவில்லை, பயிற்சி நூலில் சேர்க்கவில்லை என்பது முன்னுக்குப்பின் முரணாக இருப்பதோடு, அவருக்குக் கொள்கை ஏதும் இல்லையென்பதும் தெரியவருகின்றது.*

*(12) பன்னிரண்டாவதாக, கிரந்து எழுத்து இல்லாமல் அரபு, இலத்தீன் சொற்களை எழுதமுடியாது என்று கவலைப்பட்டுள்ளார். இப்பொழுது தமிழ்ப் பயிற்சி நூல்பற்றியே பேசப்படுகின்றது. அரபு, இலத்தீன் மொழிகள் படிக்கப் போகும்பொழுது அதைப் பற்றிப் பார்க்கலாம். அதுபோகட்டும், ஆங்கிலேயன் யாழ்ப்பாணம் வந்தான். "ழ்" என்ற தமிழ் எழுத்தை அவனால் பலுக்க முடியவில்லை. அப்பொழுது "ழ்" எழுத்தை எம்மிடமிருந்து கடன்வாங்கியா தனது மொழியில் எழுதினான். அவன், தான் எழுதும் எழுத்தில் தனக்கு ஏற்புடையதாக "யாப்னா" (Jaffna) என்று சொல்லிவிட்டு எழுதிவிட்டுப் போனான். நாங்கள் மட்டும் யாரிடமும் கடன்வாங்கி அவனவன் மொழியை அவனவன் சொல்வதுபோல சொல்லவேண்டுமாம். "மீளா அடிமை உமக்கே ஆளாய் ....." என்ற தேவாரந்தான் நினைவுக்கு வருகின்றது. தமிழ்நாட்டில் அரை நூற்றாண்டாக சென்னைக் கிறித்தவக் கல்லூரியும், வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியும் கிரந்தம் இல்லாமல் இயங்குவது இவருக்குத் தெரியாதுபோலும். மேலும் இதிலே முன்பு கூறப்பட்ட புலம் பெயர்ந்த 1-8 வகுப்புவரையான மாணவருக்கு எழுதப்பெற்றுள்ள தமிழ் நூல்களை வாங்கிப் பார்த்தால் கிரந்தம் இல்லாமல் எழுதப்பெற்றுள்ளது எப்படி என்பது புலனாகும். இந்த நூல்களை வாங்கிப் படிக்க விரும்பினால் கீழுள்ள தொலைபேசி எண்ணை அழைக்கவும்.*

*(13) இறுதியாக, இந்தப் பயிற்சி நூலோடு தொடர்பு இல்லாத, தமிழ்நாட்டுக் கல்விபற்றியும் இந்தக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளதற்கு வருவோம். "தமிழ்நாட்டிலே மழலையர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம்வரை ஆங்கிலத்திலே கற்பிப்பதாகக் கூறித் தமது அறியாமையை வெளிப்படுத்தியுள்ளார். தமிழ்நாட்டில் மழலையர வகுப்புமுதல் 12ஆம் வகுப்புவரையுள்ள மாணவரில் 83% மாணவர் தமிழ் மொழியிலேயே படிக்கின்றனர். நகர்ப்புறங்களில் வாழும் மேட்டுக் குடியினரது பிள்ளைகளும், இந்திய நடுவண் அரசுப் பணிமனைகளில் பணிபுரியும் பிறமாநிலத்தவரது பிள்ளைகளுமாக 17% மாணவர் ஆங்கிலமொழிவழிக் கல்வி பயிலுகின்றனர். இவர்களையும் தமிழ்மொழிமூலக் கல்விக்குக் கொண்டுவரவேண்டும் என்பதே அங்குச் சிக்கலாக இருக்கிறது. அதைப் புரியாமல் 100% தமிழ் மாணவரும் ஆங்கிலத்தில் கற்பதாக கட்டுரையாளர் எண்ணிக்கொண்டிருப்பது வேடிக்கையானது. மேலும் ஆங்கிலமொழிவழிக் கல்வி புகட்டும் பள்ளிகள் தனியார் பள்ளிகள் ஆகும். அரசுப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ்மொழிக் கல்வியே புகட்டப் பெறுகின்றது. இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது" கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் தெரியாது என்ற பழமோழியே நினைவுக்கு வருகின்றது.*

*நன்றி வணக்கம்*

*சிவம் பரமநாதன்*
*416-299-3717*

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# கருத்துரிமையும் - எங்கள் அகராதியில்

'இந்தியா டுடே' சஞ்சிகையின் ஆங்கில பதிப்பு இன்று நிலவும் பாலியல் உறவுகள் மனோபாவங்கள் பற்றி அது நடத்திய கருத்துக் கணிப்பு முடிவுகளைப் பிரசுரித்திருந்தது. அதன் தமிழ் பதிப்பும் கூட. அதில் தமிழ் சினிமா நடிகை குஷ்பு, கவிஞர் சுகிர்த ராணி போன்றோரையும் பேட்டி கண்டு அவர்கள் கருத்துக்களையும் வெளியிட்டிருந்தார்கள். அதில் குஷ்பு சொல்லியுள்ள சில குறிப்பான வரிகள் "பெண்கள் திருமணமாகும்போது கன்னித் தன்மை கலையாமல் இருக்கவேண்டும் என்பது போன்ற எண்ணங்களிலிருந்து நமது சமூகம் விடுதலையாக வேண்டும். கல்வி பெற்ற எந்த ஆண்மகனும் தான் திருமணம் செய்யப்போகிற வள் கன்னித் தன்மையோடு இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கமாட்டான். ஆனால் திருமணத்திற்கு முன் செக்ஸ் வைத்துக் கொள்ளும்போது கர்ப்பமாகாமலும் பால்வினை நோய் வராமலும் பெண் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேண்டும்."

இப்பத்தியின் தலைப்பு "காலாவதியாகும் கற்பு" கவனத்தை ஈர்த்திருக்கவேண்டும். பின் அடுத்த நாள் பேட்டி ஒன்றில், "திருமணத்திற்கு முன் பால் உறவு கொண்டிராதவர் எத்தனை பேர் இருப்பார்கள், சொல்லுங்கள் பார்ப்போம்" என்ற அர்த்தத்திலோ என்னவோ கருத்து சொல்லியிருந்தாராம். "தமிழ் முரசு" என்று புதிதாக தொடங்கப்பட்ட மாலை இதழ், 'சன் டிவி'யில் இடைவிடாது விளம்பரப்படுத்தப்பட்ட இதழ் அது, அதை இதழ் என்பதற்கு பதிலாக tabloid என்று சொல்லவேண்டும். முதல் பக்கம் முழுதையும் கொட்டை எழுத்துக்களிலான பரபரப்பான தலைப்பு பாதிக்கு மேலும், செய்திக்கவர்ச்சி, பாலுணர்வுக் கவர்ச்சி நிறைந்த படங்கள் பத்திரிகை முழுக்க ஆக்கிரமித்திருக்கும். படிப்பதற்கு அதில் ஏதும் இருக்காது. படங்களையும் கொட்டை எழுத்து தலைப்புகளையுமே விற்பனைக்கு வைக்கும் tabloid அது. தமிழ் முரசு அதன் குணத்திற்கேற்ற தலைப்புடன் அது குஷ்புவின் கருத்துக்களை பரபரப்புக்குள்ளாக்கியது.

உடனே ஒரு பெரும் பெண்கள் படையொன்று குஷ்புவின் வீட்டின் முன் குவிந்து ஆர்ப்பாட்டம் செய்தது. அப்பெண்களின் கையில் துடைப்பம், பதாகைகள் இருந்தன. தமிழ் பெண்களை இழிவு படுத்தி விட்டதாகவும், பெண் இனத்தின் சாக்கடையான குஷ்புவை கைது செய் என்றும் தமிழ் நாட்டை விட்டுப் போ என்றும் இப்படியாக பதாதைகளை வைத்திருந்தனர். குஷ்பு அப்போது வெளிநாட்டில் இருந்ததால் தாக்கப்படுவதிலிருந்து தப்பித்தார் என்று சொல்ல வேண்டும். மறு நாள் இப்போராட்டம் தமிழ் நாடு முழுதும் பரவியது. உடனுக்குடன் அவசர அவசரமாக தன் வெளிநாட்டு பயணத்தை பாதியில் ரத்து செய்து குஷ்பு சென்னை திரும்பினார். திரும்பியதும் அவர் ஜெயா தொலைக்காட்சியில் தான் தமிழ் பெண்களைப்பற்றி தவறாக எதுவும் சொல்லவில்லை என்றும், தமிழ் நாடுதான் தனக்கு வாழ்வளித்தது என்றும் அதற்கு இழிவு தரும் வகையில் தான் எதுவும் செய்யமாட்டேன் என்றும் தன் கருத்துக்கள் எவரையும் புண் படுத்தியிருப்பின் தான் மன்னிப்புக் கோருவதாக வும் கண் கலங்க பேசமுடியாது விக்கித்துப் போக அவர் பேசியது உருக்கமாக இருந்தது.

இந்த ஆர்ப்பட்டங்களின் பின் இருந்தது தமிழ் பாதுகாப்பு இயக்கம் அதன் பின் இருந்தது மருத்துவர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சியும் தொல் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தையும். இவ்விருவரின் தமிழ் பாதுகாப்பு செயல்பாடு, தமிழ் திரைப்படங்களுக்கு தமிழ் பெயர் வேண்டும். நிறுவனங்கள், விளம்பரப் பலகைகள் பெயர் தமிழில் தான் இருக்க வேண்டும். இப்படியாக அதற்கு ஒரு கவனமாக சலித்தெடுத்த நோக்கங்கள் உண்டு. 'சன் டிவி'யின் ஆங்கிலப்பெயர் பெயர் இதற்கு விதி விலக்கு. பா.மா.க விடுதலைச் சிறுத்தை செல்வாக்குள்ள இடங்களில் கால் வைப்பவராகத் தோன்றும் ரஜினி காந்த், விஜயகாந்த் போன்றோரையே குறிவைக்கும் விதத்தில் இவர்கள் தமிழ் பாதுகாப்பு வளைந்து கொடுக்கும்.

குஷ்பு ஜெயா தொலைக்காட்சியில் பகிரங்க மன்னிப்பு கேட்டபின்பும் ஆர்ப்பாட்டங்கள் வலுக்கத்தான் செய்தன. ஜெயா தொலைக்காட்சி அந்த ஆர்ப்பட்டத்தில் இருந்த பெண்களை, குஷ்பு தமிழ் பெண்களை இழிவு படுத்தும்படி என்ன சொன்னார், நீங்கள் படித்தீர்களா, எங்கே படித்தீர்கள் என்றெல்லாம் கேட்ட கேள்விகளுக்கு எங்களுக்குத் தெரியாது அப்படிப் பேசினதாகச் சொன்னாங்க என்று தான் பதில் வந்தது. ஆக இது திட்டமிட்டுச் செய்த காரியம். இவர்கள் கூலிக்கோ அல்லது கட்சிக் கட்டுப்பாட்டுக்கோ ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் என்பது வெளிப்பட்டது. ஆர்ப்பாட்டங்களோடு நிற்க வில்லை. சென்னையின் பல கீழ் நீதி மன்றங்களில் குஷ்புவுக்கு எதிராக அவதூறு செய்ததாக வழக்குகள் தொடரப்பட்டன. அதைத் தொடர்ந்து தமிழ் நாட்டின் எல்லா ஊர்களிலும், சேலம், செங்கல்பட்டு, திருச்சி என்று பரவலாக சுமார் 25 நீதி மன்றங்களில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது. சட்டம் குற்ற விசாரணைக்கல்ல, சட்டமே தண்டனைக்கான கருவியாக ஆக்கப்பட்டது. ஒருவர் 25 நீதிமன்றங்களில் ஒரே குற்றத்திற்காக ஒரே சமயத்தில் எப்படி ஆஜராக முடியும்? விசாரணையை எதிர்கொள்ளமுடியும். பல மன்றங்களில் ஒரே சமயத்தில் ஒரே நாளில் non-bailable warrant அனுப்பப்பட திட்டமிடமுடியுமானால் அது சட்டமல்ல வலிந்து துன்புறுத்தல், வன்முறை என்று தான் சொல்லவேண்டும். கட்சிகளும் அது சார்ந்த வழக்கறிஞர்களும் சட்டத்தை தம் ஆக்கிரம ஆணாதிக்க நோக்கங்களுக்கு இவ்வாறு வளைக்க முடியும் என்பதை நிரூபித்தனர்.

தமிழ் நாட்டில் வலியோர் படை ஒரு தனித்த பலமற்றவனை ஒடுக்க கையாளப்படும் கட்டை பஞ்சாயத்து என்று தான் சொல்ல வேண்டும். அரசியல் காரணங்களுக்கோ, பழிவாங்கு முகமாகவே, அல்லது பச்சையான ஆணாதிக்க நடைமுறை காரணங்களுக்காகச் செய்யப்படும் கட்டைப் பஞ்சாயத்து.

அதன் பின்னும் ஆர்ப்பாட்டங்கள் நிற்கவில்லை. தமிழ் நாடு முழுதும் பரவியது. 'சன் டிவி' இதை ஒரு முக்கிய செய்தியாக இடை விடாது பரப்பியது. ஆர்ப்பாட்டக்காரர்கள் துடைப்பங்களை உயர்த்திப் பிடித்து தங்கள் கோபத்தைக் கொட்டினார்கள். குஷ்புவின் உருவ பொம்மைகள் கொடும்பாவி கொளுத்தப்பட்டன. தமிழ் நாட்டிலும் தமிழர் வாழும் வெளிநாடுகளிலும் பார்ப்போர் தொகை மற்ற எதையும் விட அதிகம் கொண்டது 'சன் டிவி' தான். தொலைக்காட்சி பெட்டியைத் திறந்தால் பார்ப்பது 'சன் டிவி' என்ற அளவிற்கு கை தானே இயங்கும். இப்பழக்கம் படிய அது தானாகவே வேரூன்றிக் கொண்டது. ஆக, அது எதையும் ஒரு பிரச்சினையாக உருவாக்கி அதற்கு எத்தகைய வண்ணத்தையும் தந்து அதை உண்மையாக ஸ்தாபிக்கும் வல்லமை பெற்றுள்ளது. 'சன் டி.வி.' குஷ்புவின் கருத்தினால் தமிழ் உலகமே ஒரு கொந்தளிப்பில் மூழ்கியுள்ள அபாயத்தை ஒவ்வொரு செய்தியோடும் பார்ப்போருக்குத் தொடர்ந்து பிரசாரம் செய்து வந்தது. தமிழ் முரசுவின் ஓர் இதழின் முதல் பக்கம், ஆர்ப்பட்டத்தின் புகைப்படத்துடன், "குஷ்புவே! தமிழகத்தை விட்டு ஓடு. துடைப்பத்துடன் பெண்கள் ஆர்ப்பட்டம்".

ஆனால் திமுக தலைவர், கருணாநிதி வாய் திறந்தவரில்லை. அவ்வப்போது எந்த விடயம் பற்றியும் பத்திரிகையாளர் கூட்டம் இல்லாத போதும் தானே கேள்விகளும் கேட்டுக் கொண்டு அவற்றிற்கு தன் கருத்துக்களையும் அவரது அழகு தமிழில் தயாரித்து பத்திரிகைகளுக் கெல்லாம் அனுப்பி வைக்கும் பழக்கம் கொண்டவர். அவர் வாய் திறக்கவில்லை. அவர் கருத்து கூறாததே தமிழ் நாட்டில். ஒரு முக்கிய செய்தியாகும்.

'சன் டிவி' இவ்விடயத்தில் இவ்வளவு முனைப்புடன் செயல்படுவதற்கு ஒரு காரணம் முதலிலும் சொல்லப்பட்டது, பின்னரும் அவ்வப்போது சொல்லப்பட்டு வருகிறது. குஷ்பு ஜெயா தொலைக்காட்சியில் நடத்தும் "ஜாக் பாட" என்னும் மகளிருக்கு முதன்மை தரும் நிகழ்ச்சி ஒரு பெரும் வெற்றியாகவும் அதன் காரணமாக ஜெயா தொலைக்காட்சிக்கு பார்வையாளர் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் அவ்வட்டாரங்களில் சொல்லப்பட்டு வருகிறது. அதன் காரணமாகவே அந்நிகழ்ச்சி நீண்ட நாட்களுக்குத் தொடர்கிறது. இதனால் மகிழ்ந்த ஜெயலலிதா, குஷ்புவை வரும் சட்ட மன்றத் தேர்தலில், கருணாநிதி முதலமைச்சராக முடி சூட்டிப் பார்த்து மகிழ விரும்பும் அவர் மகன் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக நிற்க வைக்க எண்ணியிருப்பதாக கருணாநிதி சந்தேகப்படுவ தால், தேர்தலுக்கு முன்னரே குஷ்புவை மக்கள் மத்தியில் பெயரிழக்க வைக்கும் தந்திரம் என்று ஒரு பேச்சு. அது அப்படியாயின் அத்தந்திரம் வெற்றி பெற்று விட்டது என்று தான் சொல்லவேண்டும். இனி இவ்வளவு சச்சரவுக்குப் பிறகு தேர்தலில் நிறுத்தி வைக்கப்பட மாட்டார் என்பது நிச்சயம்.

## வெங்கட் சாமிநாதன்

இவ்வளவு அவதூறும் பிரசாரமும் ஒரு பிரம்மாண்ட பொய்யின் ஆதாரத்தில் வலிய கிளப்பப்பட்ட ஒன்று என்பதைப் பற்றி இவர்கள் யாரும் கவலைப்படவில்லை. சில பத்திரிகைகளும், இன்னும் பல முக்கிய மனிதர்களும் திரும்பத் திரும்ப கேட்டனர். முதலில் குஷ்பு தமிழ் பெண்களைப்பற்றியே எதுவும் பேசவில்லை. இரண்டாவது அவர் கற்பு என்பது வெறும் உடல் பற்றியது மட்டும் அல்ல என்றும் வாரம் தோறும் 'பாய் ஃப்ரண்டை' (boy friend) மாற்றிக்கொள்வது போன்ற விடயங்களை தன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் கூறியிருக்கிறார். மேலும் இது ஒரு பத்திரிகை அது நடத்திய கருத்துக் கணிப்பின் சந்தர்ப்பத்தில் கேட்டதற்குச் சொன்ன பதில்கள் என்பதெல்லாம் யாரும் காதிலும் விழவில்லை. வெகு சௌகரியமாக, இந்த அசௌகரிய விடயங்களை யாரும் கண்டு கொள்ளவே இல்லை. இது நேர்மையற்ற திட்டமிட்ட சதித் திட்டம் போலவே தோன்றுகிறது.

இதற்கு இன்னொரு பின்புலமும் சொல்லப்படுகிறது. "காசுக்கு நடிக்கிறது விபசாரம் மாதிரித்தான்", 600 ருபாய்க்கு மேக்கப் போடற பொம்பிளை" என்றெல்லாம் அவதூறாக பேசிய தங்கர் பச்சானை திரைப்பட நடிகர் சங்கம் மூலம் விஜயகாந்த் மூலம் எல்லோர் முன்னிலையிலும் கைகூப்பி மன்னிப்புக் கேட்க வைத்ததில் குஷ்பு மிகத் துடிப்பாக முன்னிலையில் இருந்தார். அவர் தன்னை தமிழ் பாதுகாப்பு இயக்கத்துடன், பா.ம.கவுடன், திருமாவளவனுடன் இணைத்துக் கொண்டவர்.



முன்னர் அவர்கள் உதவியை நாடிய போது, "பின்னர் சமயம் வாய்க்கும் போது பார்த்துக் கொள்ளலாம், இப்போது உங்கள் படம் திரையிடுவதற்கு ஏதும் தடங்கல் இல்லாது பார்த்துக் கொள்ளுங்கள் என்று அறிவுரை சொல்லப்பட்டது என்றும் அதன் விளைவாகத்தான் இப்போது, தங்கள் ஆளான தங்கர் பச்சானை தலை குனியச் செய்த குஷ்புவை பழிவாங்கும் கதை நடை பெறுகிறது என்பதும் ஒரு தரப்பு விளக்கம் அளித்தது. கருத்துக் கணிப்பு நடத்திய 'இந்தியா டுடே'யோ, குஷ்பு போன்றே கருத்துக்கள் சொன்ன சுகிர்த ராணி என்னும் பெண் கவிஞரும் கண்டு கொள்ளப்படவே இல்லை. எல்லோருடைய குறியும் குஷ்பு மீதே இருந்தது.

மருத்துவர் ராமதாசும் தொல் திருமாவளவனும் ஆர்ப்பட்டங்களைத் தொடர்ந்து, அவற்றின் பின் இருப்பது தாம் தான் என்பதைச் சொல்லும் வகையில் பேசி வந்தார்கள். தமிழ் பெண்களின் கற்பை களங்கப் படுத்திப் பேசினார் குஷ்பு என்பது திருமாவளவனின் வாதம். முன்னர் கற்பு என்பதே தமிழனின் மீது இந்துத்வா சுமத்திய சமாசாரம் என்று பேசியவர். இப்போது எப்படி அது தமிழ் பண்பாட்டு இலக்கணமாயிற்று என்று கருணாநிதியின் மகள், கவிஞர், கனிமொழி கேட்டார். மேலும் கற்பு மாத்திரமல்ல, களவும் தமிழ் அகப் பாடல்களில் நிறைய பாடப்பட்டிருக்கிறதே என்றும் கேட்டார். இவர்கள் இருவரும் தம்மை பெரியார் ஆதரவாளர்களாக அடிக்கடி அறிவித்துக்கொண்டிருப்பவர்கள். இவர்களுக்கு பெரியார் கற்பு, திருமணம், குடும்பம் பற்றியெல்லாம் சொன்ன கருத்துகள் திரும்ப நினைவுறுத்தப்பட்டன.

'நாசமாப் போகிற கற்பு, கற்பு என்று சொல்லி, நம் பெண்களை எவ்வளவு கேவலமாக ஆக்கி விட்டனர்? ஆண் இரண்டு வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டால், பெண்கள் மூன்று ஆசை நாயகர்களை வைத்துக்கொள்ள முற்படவேண்டும்.'

'பெண்களைவிட ஆண்கள் செல்வம், வருவாய், உடல் வலுவு கொண்டவர்களாக ஆக்கப்பட்டு விட்டதனாலும் பெண்கள் அடிமை யாவதற்கும், புருஷர்கள் மூர்க்கர்களாகி கற்பு என்பது தங்களுக்கு இல்லை என்று நினைப்ப தற்கும் அனுகூலம் ஏற்பட்டதே தவிர வேறில்லை.'

'தவிர, புருஷர்கள் கற்புடையவர்கள் என்று குறிக்க நமது மொழியில் தனி வார்த்தைகளே காணாமல் மறைபட்டுக் கிடப்பதற்கு காரணம் ஆண்களின் ஆதிக்கமே தவிர வேறில்லை. கற்புக்காக பிரியமற்ற இடத்தைக் கட்டி அழுது கொண்டிருக்கச் செய்யும்படியான நிர்ப்பந்தக் கல்யாணங்கள் ஒழியவேண்டும். கற்புக்காக் புருஷனின் மிருகச் செயலைப் பொறுத்துக் கொண்டிருக்கவேண்டும் என்கின்ற கொடுமையான மதங்கள், சட்டங்கள் மாயவேண்டும்.'

'நமது கல்யாணத் தத்துவம் எல்லாம் சுருக்கமாகப் பார்த்தால், பெண்களை ஆண்கள் அடிமையாகக் கொள்வது என்பதைத் தவிர வேறு ஒன்றுமே



தொடர்ச்சி 22ஆம் பக்கம்



அனுபவமும், திறமையும், பொறுமையும் இணைகிற போது உயர்ந்த இலக்குகள் இலகுவாக சாத்தியமாகும்

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc. Broker
1711 McCowan Raod, Suite 206
Toronto, Ontario M1S 3Y3
T. 416.321.6969 F. 416.321.6963

Nel Ketha B.Sc. (Ag)
Sales Representative
416.677.4707
knellinathan@trebnet.com



RAFFLE CLASS AND HIGHLY PROFESSIONAL

# 'காளமேகப் புலவரின் கவித்துவம்'

காளமேகப் புலவர் நாவீறு படைத்த நகைச்சுவை மன்னன். மாரி போல் கவிமழை பொழிந்த பெரும்புலவன். தனது பாடல்களால் காலத்தை வென்று நிற்கும் கவிஞன் அவன். உதாரணத்திற்கு அவரது ஒரு பாடலைப் பார்ப்போம்.

ஓ, கா, மா, வீ, தோ வுரைப்பன் டு, டு, டு, டு, டு
நாகார் குடந்தை நகர்க் கதிபர் - வாகாய்
எடுப்பர் நடமிடுவர் ஏறுவர் அன்பர்க்குக்
கொடுப்பர் அணிவர் குழைக்கு.

சின்னப்பிள்ளை 'டு' விடுவதைப் போல் அமைந்துள்ள இவ்வெண்பாவை விளங்கிக் கொள்வது கடினமாகும். ஆனால் முதல்வரியின் கடையில் உள்ள 'டு' எழுத்தை முன்னுள்ள ஓ, கா, மா, வீ, தோ என்ற எழுத்துக்களோடு சேர்த்து விட்டால் இலகுவாக பொருள் விளங்கி விடும். அப்பொழுது ஓடு, காடு, மாடு, வீடு, தோடு என்ற சொற்கள் உருப்பெற்று விடும்.

குடந்தை நகரில் கோயில் கொண்டுள்ள இறைவனைப் பற்றியது இப்பாடல். சிவனின் செயல் விளங்கும் இவ்வெண்பா சிந்தைய மகிழ்விக்கும் தன்மையது. சிவன், கையில் மண்டை ஓட்டை ஏந்தியுள்ளார். நடனம் ஆடும் இடப் பிணம் சுடும் சுடுகாடு. ஏறிச் செல்லும் உளர்தி காளை மாடு. அடியவர்க்கருள்வது வீடு பேறு. ஒரு காதில் அணிந்திருப்பது தோடு. முதல்வரி சிரிப்பிற்குரியது. வெண்பாவை நுணுகி ஆராய்ந்தால் இறைவனது செயல்களை கிண்டல் செய்வது போலவும் அமைந்துள்ளது.

மற்றுமோர் வெண்பாவையும் உற்று நோக்குவோம்.

அரையின் முடியிலணி மார்பின் நெஞ்சில்
தெரிவையிடத் தமர்ந்தோன் சேவை - புரையறவே
மானார் விழியீர் ம, ல, ர, ண வொற்றிற்கும்
ஆனாலா நா, நீ, நூ, நே.

முதல் இரண்டு வரிகளுக்கும் மூன்றாவது நான்காவது வரிகள் உயிர் போல அமைந்துள்ளன. இறுதி வரியிலுள்ள நா, நீ, நூ, நே என்ற எழுத்துக்களுடன் மூன்றாவது வரியிலுள்ள ம, ல, ர, ண என்ற எழுத்துக்களை மெய் எழுத்துக்காளக்கி, எதிர் நிரை நிரல் நிறையாக இணைத்துப் பார்த்தால் பொருள் விளங்கி விடும். அப்போது நேயம் நூல், நீர், நாண் என்ற சொற்கள் உருவாகும். இச் சொற்களை முதலிரண்டு வரிகளோடு பொருள் தெளிவாக விளங்கும். அரையின் நாண். முடியிலணி நீர், மார்பிலணி நூல், நெஞ்சில் நேயம். இறைவன் தனது அடியவர்களுக்காக நெஞ்சில் நேயத்தை அல்லது அன்பை கொண்டிருக்கின்றான். பாம்பை அரை நாணாக அணிந்துள்ளான். திருமார்பில் முப்புரி நூலைத் தரித்துள்ளான். சடை முடியில் கங்கையைச் சூடியுள்ளான். உமையை இடப்பாகமாகக் கொண்டு இடபத்தில் எழுந்தருளி அடியார் இடர்களைக் களைபவன் இறைவன் என்பதே இதன் பொருள்.

## நா. க. சிவராமலிங்கம்

---

# விஞ்ஞானமும் மெஞ்ஞானமும்

## (ஒரு சாது தந்த விளக்கம்)

*உருண்டு திரண்டு அக்கினிக் காற்றாய் இருப்பது சூரியன். அதனிடத்திருந்து சிதறி வந்து குளிர்ந்து இறுகி இருப்பது நிலவுலகம். பரம் பொருளாகிய சிவனிடத்து இருந்து ஜடசக்தி பஞ்சபூதங்களாயின. பஞ்சபூதங்களில் இருந்து எண்ணிறந்த அண்டங்கள் உண்டாயின. மணிவாசகப்பெருமான் அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம் அளப்பருந்தன்மை வளம் பெருங்காட்சி என்றார். உண்டை, உருண்டை எனவும், பிறக்கம் குவியலெனவும் தெரிந்துகொள்க. பிரமாண்டமானது எண்ணிறந்த கோளங்களையுடையது. முற்றிலும் தெரிந்து கொள்ள முடியாதது. ஆராயுமளவு அவைகளின் அழகும், சீரமைப்பும் கண்டு வியப்பதற்கு உரியவைகளாயிருக்கின்றன. அகத்தின் கண்கொண்டு பார்க்க ஜீவனையே சிவன் என்று சித்தாந்த நூல் கூறுவதை வைத்து சிவனின் உருவத்தை விஞ்ஞானக்கண்கொண்டு பார்த்தபோது மெய்ஞானம் விளங்கியது.*

*பரமனுக்கு வடிவம் இல்லை என்பதற்கு சிவலிங்கம் சின்னமாகிறது. பிறப்பு, இறப்பு இல்லாத சிவன் நீக்கமற எங்கும் நிறைந்து பிராணனுக்கும் மனதிற்கும் அப்பாற்பட்டுள்ளான். ஆன்மாக்களின் ஆணவமலம் அழிய வேண்டுமானால் சிவலிங்க வழிபாடு மிகவும் இன்றியமையாததாகும். சிவலிங்கத்தின் கீழ்ப்பீடத்தில் நகாரமும் நடுக்கட்டத்தில் மகாரமும் மேற்பீடத்தில் சிகாரமும் நாதக்குழியில் வகாரமும் லிங்கத்தில் யகாரமும் ஆகிய ஐந்து எழுத்தின் வடிவமாக விளங்குவது சிவலிங்கம். "குறிகளும் அடையாளமும் கோயிலும், நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும் அறிய ஆயிரம் ஆரணம் ஓதினும், பொறியிலீர் மனமென்கொல்புகாததோ" என்று பாடியுள்ளார் திருநாவுக்கரசர்.*



*'சித்திரம் பேசினால் சிறப்பல்லவோ!! இரு நண்பர்கள் சிவன் கோவிலுக்குச் சென்று அங்குதரிசனம் செய்துவிட்டுவரும்போது கோயில்பிரகாரச் சுவரில் சிவனுடைய சித்திரம் வண்ணத்தில் தீட்டியிருப்பதை பார்த்து அந்த இருவரும் அதன் அழகிலேயே மயங்கி கொஞ்சநேரம் நின்றனர். அதில் லயித்து இருந்த நண்பர்களில் ஒரு ஓவியர். இந்தச்சித்திரம் மிக அற்புதமாக வரையப்பட்டிருக்கிறது. சிவனின் தலையில் கங்கைநீர்பெருகிவருகிறது. கழுத்தில் பாம்பு ஆபரணமாகத் தீட்டப்பட்டிருக்கிறது. இடையில் புலித்தோல் ஆடையில் சிவன் காணப்படுகிறார். கால்களின் நடுவில் ஓம் என்ற எழுத்து காணப்படுகிறது. இந்த அற்புதமான படத்தைப் பார்த்து மகிழ்ந்தவர் தனது நண்பரைப் பார்த்து இதுபோன்ற ஒரு அழகான சித்திரம் உன்னால் வரைய முடியுமா? என்று கேட்டார். அதற்கு நண்பர் இதுபோன்ற சித்திரத்தை காலையில் வரைந்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு வீடு திரும்பியதும் கோவிலில் பார்த்த படியே சிவனின் சித்திரத்தை வரைந்து நண்பனுக்கு கொடுத்தார். அந்த நண்பர் மிகவும் மகிழ்ச்சியடைந்து நீ எழுதியிருக்கிற ஓவியம் என்னுடம் பேசுகிறமாதிரியே இருக்கிறது. பத்தியை பெருக்குகிறது. இந்தச்சித்திரம் பேசினால் நமக்கு எவ்வளவோ உண்மைகளை எடுத்து சொல்லும் என்றார்.*

*பழங்கால கலைகளே தேடுவாரற்று அழிந்து வருகின்றன என்றார் ஓவிய நண்பர். இப்படி பேசிக்கொண்டே ஓர் இடத்தைவந்து சேர்ந்தனர். அங்கே ஒருசாது அவரிடம் இந்த சிவனின் படத்தை காண்பித்து இதன் உண்மைப்பொருள் என்ன என்று கேட்டார். சாது நீ எப்படி இந்தப்படத்தை வரைந்தாய் எனக் கேட்க, அங்கே இதுமாதிரி சிவன் படம் சுவரில் வரையப்பட்டிருந்தது. அதை பார்த்து இந்தப்படத்தை வரைந்து கொண்டேன். இந்தப் படத்தின் அழகில் மயங்கி இந்தபடத்தின் உண்மையான பொருளை தங்களிடம் கேட்டு தெரிந்து கொண்டு போகலாம் என்று வந்தோம் என்று கூறினார்கள். உன் மனதில் தோன்றி நீ எவ்வாறு சித்திரமாக வரைந்தாயோ அதைப்போல ஒரு சித்தர் தன் மனதில் சிவன் இந்த உருவில் தோன்றியதை வைத்து அந்த சித்த ஓவியர் இந்தச் சிவனின் உருவத்தை முதலில் வரைந்தார் என்று சாது கூறினார்.*

*மேலும் உண்மையான பக்தியை ஆராதனையாலோ பஜனையாலோ விளக்கவோ வரையறுக்கவோ இயலாது. "பத்திரம் புஷ்பம் பழம் தோயம் சமர்ப்பயாமி" என்று வேதம் கூறுகிறது. பத்திரம்: இது என்ன துளசி இலையா வில்வம் இலையா? பத்திரம் என்பது வெறும் இலையல்ல. உடலே இலை. இந்த இலை எப்போது கீழே விழும், எரிக்கப்படும், காய்ந்து போகும் என்று யாரும் கூற இயலாது. இறைவா என் உடல் இலை போன்றது. அதை அர்ப்பணிக்கிறேன். புஷ்பம் எத்தகைய மலர் . இதயம் என்னும் மலர். இது ரோஜா, மல்லிகை போன்று கடையிலே கிடைப்பதல்ல. இன்று வாங்கும் பூ நாளை வாடிவிடும். ஹிருதய புஷ்பம் என்னும் வாடாது பரிசுத்தமானது அன்பு தேன் நிறைந்தது இதயமலர்.*

*பழம்: என்ன பழம் உங்களுக்கு தேவை. அப்பிளா வேறு ஏதாவது பழமா? அவை எல்லாம் மரத்தில் விளைந்தவை. எனது மனமே மலர். செயலே பழம். அதைத் தருகின்றேன். தோயம் என்றால் என்ன கங்கை நதி தண்ணீரல்ல. உங்கள் அன்பில் நினைந்து உருகும் போது உருகுகின்ற ஆனந்தக் கண்ணீர்தான் தோயம். இதையே பக்தன் அர்ப்பணிக்கின்றான். இதையே இறைவன் எதிர்பார்க்கின்றான். இது மெய்ஞான சித்த ஓவியரின் கருத்து. பத்திரம், புஷ்பம், பழம், தோயம் ஆகிய நான்கையும் இணைத்துச் சித்தரித்தார்கள். இவ்வாறு ஓவியருக்கு சாது விளக்கம் கூறி முடித்தார்.*

## கந்தையா சண்முகம்
இளைப்பாறிய அதிபர்

---

# இந்திய நாடாளுமன்றம்

## 2ஆம் பக்கத் தொடர்ச்சி

*குழுவினரிடமிருந்து அந்த உறுப்பினர்கள் சிரித்தபடியே பெற்றுக்கொள்ளும் காட்சிகளை "ஆஜ்தக்"கில் இன்று ஒளிபரப்பப்பட்டது. நாடெங்கும் இந்த செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுவரை ஊழல்களில் ஈடுபட்டதாக வந்த செய்திகளைவிட, கடமையைச் செய்வதற்கே உறுப்பினர்கள் லஞ்சம் பெற்றது கட்சிகளின் தலைமைகளையும் ஆட்டம் காண வைத்துவிட்டது.*

*பதினொரு உறுப்பினர்களில், மகராஷ்டிராவைச் சேர்ந்த அன்னா சாகேப் பாட்டீல், ஒய்.ஜி.மாகாஜன், சத்தீஷ்கரின் பிரதீப் காந்தி, இமாச்சல் பிரதேசத்தின் சுரேஷ்சந்தால், மத்தியப் பிரதேசட்ர்க்தின் சந்திர பிரதாப்சிங், ஒரிசாவைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் சந்திர பால்சிங் லோதா ஆகியோர் ஆறு பேர் பாஜகவைச் சேர்ந்தவர்கள்.*

*காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராம்சேவாக் சிங் குவாலியர் தொகுதி உறுப்பினர் ஆவார். ஜார்க்கண்டு தொகுதி உறுப்பினர் மனோஜ்குமார் ராஷ்ட்ரிய ஜனதாதளம் கட்சியைச் சேர்ந்தவர் ஆவார். உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த நரேந்திரகுமார் குஸ்வகா, லால்சந்திரா, ராஜாராம்பால் ஆகியோர் பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆவர்.*

*இலஞ்சம் பெற்ற பாஜக உறுப்பினர்களை கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்வதாக கட்சித்தலைவர் அத்வானி அறிவித்தார். அதைத் தொடர்ந்து, காங்கிரஸ் கட்சியும் அதன் நாடாளுமன்ற உறுப்பினரை இடைநீக்கம் செய்துள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலர் அம்பிகா சோயுச் தெரிவித்தார்.*

---



வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரம்ஜி - 416.230.1107

PARAM GNANASWARAN
Associate Broker

HOME LIFE GTA REALTY INC. Real estate Brokers
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969

Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666

paramg@gmail.com

# விளையாடுத் தகவல்கள் 180

## இந்தியா Vs இலங்கை

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையே சேப்பாக்கத்தில் நடைபெற்ற முதலாவது துடுப்பாட்ட ரெஸ்ற்போட்டி எதிர்பார்த்தது போலவே வெற்றி தோல்வியின்றி முடிந்தது. ஆனால், இலங்கை வீரர்களது ஆட்டம் அடுத்த இரண்டு போட்டிகளுக்கு எச்சரிக்கை விடும் வகையில் அமைந்தது. சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் அரங்கில் செவ்வாய்க்கிழமை போட்டியின் கடைசி ஐந்தாம்நாள் ஆட்டம் நடைபெற்றது. இலங்கை அணியின் பந்துவீச்சு 'மும்மூர்த்திகள்' சாமிந்த வாஸ், தில்ஹாரா ஃபெர்ணான்டோ, முத்தையா முரளிதரன் ஆகியோரது வீச்சால் 73.2 ஓவர்களில் 167 ஓட்டங்களைச் சேர்த்து முதல் இன்னிங்ஸை இந்தியா இழந்தது. இலங்கைக்கு எதிராக இதுவே இந்தியாவின் குறைந்த பட்ச எண்ணிக்கை. இதற்கு முன்பாகவே காலேவில் (இலங்கை) 2001இல் நடைபெற்ற போட்டியில் 180 ஓட்டங்களைச் சேர்த்ததே இந்திய அணியின் குறைந்தபட்சமாக இருந்தது.

இரண்டு விக்கெட்டுக்கு 90 ஓட்டங்கள் என்ற எண்ணிக்கையுடன் செவ்வாய்கிழமை இந்தியா ஆட்டத்தைத் தொடர்ந்தது. ஆனால் இலங்கை பந்து வீச்சாளர்களை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தவண்ணம் இருந்தது.

**சச்சின் 22:** 35வது சதத்தைப் பெற்று சாதனை படைப்பார் என எதிர்பார்த்த ரசிகர்களுக்கு சச்சின் டெண்டுல்கரின் ஆட்டம் பெரும் ஏமாற்றமாக அமைந்தது. அவரிடம் வழக்கமான ஆட்டத்தைக் காணமுடியவில்லை. அவர் 22 ஓட்டங்களைச் சேர்ந்திருந்தபோது, முரளிதரன் வீசிய பந்தில் எல்பிடபிள்யூ ஆனார். அவர் 126 பந்துகளை எதிர்கொண்டார். இதிலிருந்தே அவரது மோசமான ஆட்டத்தை உணரமுடிகிறது.

அடுத்து, நீண்டநாள்களுக்குப் பிறகு அணிக்குத் திரும்பிய முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி, ஐந்து ஓட்டங்களை மட்டும் சேர்த்து வெளியேறினார். அத்துடன் பந்துவீச்சிலும் மோசம் போனார். இரண்டு ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். இதனால், அவர் மோசமான நிலையிலிருந்து மீளவில்லை என்பது உறுதியாகியுள்ளது.

தோனி 30: அதே சமயம் முதல் முறையாக ரெஸ்ட் போட்டியில் விளையாடும் மகேந்திர சிங் தோனி, 30 ஓட்டங்களைச் சேர்த்து அணியின் எண்ணிக்கை உயர உதவினார். அதற்காக அவர் சந்தித்த 54 பந்துகளில் ஆறு பந்துகள் பவுண்டரிக்குச் சென்றன.

கும்ப்ளே - தோனி ஜோடி ஒன்பதாவது விக்கெட்டுக்கு 31 ஓட்டங்களைச் சேர்த்தது குறிப்பிடத்தக்கது. உணவு இடைவேளைக்குச் சற்றுப் பின்னர் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இலங்கை 168- 4 வி: அடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை 43 ஓவர்களில் நாலு விக்கெட்டுகளை இழந்து இந்தியாவின் எண்ணிக்கையை விஞ்சிய நிலையில், நடுவர்கள் சம்பிரதாய ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். குணவர்த்தனே நாலு ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும் அடுத்து வந்தவர்கள் நிலைத்து ஆடினர். இந்திய பந்து வீச்சாளர்கள் யாரும் இலங்கை வீரர்களுக்கு அச்சுறுத்தல் தரும் வகையில் பந்துவீச முடியவில்லை. இலங்கை அணியில் அதிகபட்சமாக ஜயவர்தனே 71 ஓட்டங்களைச் சேர்த்தார். மழையின் குறுக்கீட்டால் ஒன்றரை நாள் ஆட்டமே நடைபெற்றது. வருணபகவான் மேலும் ஓரிரு நாள் ஆடுவதற்கான வாய்ப்பை அளித்திருந்தால் முடிவு கிடைத்திருக்கலாம்.

வாஸ் நாயகன்: நாலு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன் இந்திய துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலையச் செய்த சாமிந்த வாஸ் ஆட்ட நாயகனாகத் தேர்வு பெற்றார். இவ்விரு அணிகளிடையிலான இரண்டாவது ரெஸ்ட் போட்டி டில்லியில் வரும் 10 முதல் 14 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

முத்தான மூன்றாவது 'ஸ்பெல்'

இந்திய வீரர்கள் சீட்டுக்கட்டு போல சரிந்ததற்கு முக்கிய காரணம் சாமிந்த வாஸ், முரளிதரன் ஆகியோரது வலுவான பந்துவீச்சே. இருவரும் மூன்றாவது முறையாக பந்துவீசிய போது, ஓட்டங்களைக் குவிக்க இந்திய வீரர்கள் மிகவும் கஸ்ரப்பட்டனர். மூன்றாவது ஸ்பெல்லின்போது, சாமிந்த வாஸ் ஏழு ஓவர்கள் வீசி ஒரு ஓட்டத்தையும் கொடுக்காமல் திராவிட்டையும் ஆட்டமிழக்கச் செய்தார். அடுத்த நாலாவது ஸ்பெல்லிலும் அவரது வீச்சு அற்புதமாக அமைந்திருந்தது. வீசிய நாலு ஓவர்களில் மூன்று ஓவர்கள் மெய்டன்களாக அமைந்தன. கும்பளே விக்கெட்டையும் அப்போது கைப்பற்றினார். மொத்தத்தில் நாலு விக்கெட்டுகளை தனது கணக்கில் சேர்த்தார். திங்கட்கிழமை நடைபெற்ற நாலாம் நாள் ஆட்டத்தில் இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார் அவர்.



அதே போல 'சுழல் புலி' முரளிதரன், தனது மூன்றாவது ஸ்பெல்லிலேயே இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். அவரது மூன்றாவது ஸ்பெல் பந்துவீச்சு விபரம் 11 - 3 - 29 - 2.

கடைசி எட்டு விக்கெட்டுகளை 77 ஓட்டங்களுக்கு இந்தியா இழந்தது குறிப்பிடத்தக்கது.

தோனிக்கு அதிஸ்டம் - 15 ஓட்டங்களைச் சேர்த்திருந்த போது 'காட்ச்'க்கு உள்ளானார் அதிரடி ஆட்டக்காரர் மகேந்திர சிங் தோனி. ஃபெர்ணான்டோ வீசிய பந்தை விளாசிய தோனி, லெக் சைடில் நின்றிருந்த மலிங்காவிடம் 'காட்ச்' கொடுத்தார். ஆனால் அவுஸ்திரேலியா நடுவர் டேரில் ஹார்பர், அதை நோ-போல் என அறிவிக்க, பெவிலியன் திரும்பிய தோனி மீண்டும் விளையாடும் வாய்ப்பை பெற்றார்.

## தொடரை வென்றது அவுஸ்திரேலியா

அடிலெய்டில் நடைபெற்ற மூன்றாவது துடுப்பாட்ட ரெஸ்ற் போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணியை ஏழு விக்கெட் வித்தியாசத்தில் தோற்கடித்தது அவுஸ்திரேலியா. இதையடுத்து 3 - 0 என்ற கணக்கில் தொடரை வென்றது ரிக்கி பாண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி. ஆட்ட நாயகன் பிரையன் லாராவும் (மே.இ.தீவுகள்), தொடர் நாயகனாக மாத்யூ ஹேடனும் (அவுஸ்திரேலியா) தேர்வு பெற்றனர்.

இலக்கு 182: 182 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸை திங்கட்கிழமை தொடங்கிய அவுஸ்திரேலியா, முடிவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 76 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. புதன்கிழமை நடைபெற்ற கடைசி நாள் ஆட்டத்தில் மேலும் ஒரு விக்கெட்டை இழந்து இலக்கை எட்டியது அவுஸ்திரேலியா. உணவு இடைவேளைக்கு சற்று பின்னர், தொடரின் மூன்றாவது வெற்றியைச் சுவைத்தது அவுஸ்திரேலியா.

ஹேடன் 87 ஓட்டங்களுடனும், கைக் சே 30 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த ஜோடி 72 ஓட்டங்களைக் குவித்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது. முன்னதாக, ஹாக் 23 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். பிரிஸ்பேனில் நடைபெற்ற முதல் ரெஸ்ரில் 379 ஓட்டங்களிலும், ஹோபர்ட்டில் நடைபெற்ற இரண்டாவது ரெஸ்ரில் ஒன்பது விக்கெட்டிலும் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது. பிராங் வொரல் கோப்பையைத் தொடர்ந்து ஐந்தாவது முறையாக அவுஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. 1999 ஆம் ஆண்டு முதல் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் 13 போட்டிகளில் விளையாடியுள்ள அவுஸ்திரேலியா 12 இல் வெற்றி கண்டுள்ளது. அதே சமயம், 1992 - 93 இல் ரிச்சி ரிச்சர்ட்சன் தலைமையிலான அணி பெற்ற வெற்றிக்குப் பின்னர், எந்த மே.இ.தீவுகள் அணியின் அணித்தலைவர் அவுஸ்திரேலியாவை அசைக்க முடியவில்லை.

**எஸ். கணேஷ்**

## முரளிதரனும் சச்சினும் சாதனை!

இலங்கைக்கு எதிரான இரண்டாவது துடுப்பாட்ட ரெஸ்ட் போட்டியில் 290 ஓட்டங்களுக்கு முதல் இன்னிங்ஸை இழந்தது இந்தியா. புதுடில்லியில் நடைபெற்ற இரண்டாம் நாள் ஆட்டம் இந்திய ரசிகர்களுக்கு கடும் ஏமாற்றமாக அமைந்தது. மூன்று விக்கெட்டுக்கு 245 ஓட்டங்கள் என்ற நிலையுடன் ஏழாவது நாள் ஆட்டத்தைத் தொடங்கிய இந்தியா 290 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. 45 ஓட்டங்களுக்கு மீதமிருந்த ஏழுவிக்கெட்டுகளையும் இழந்தது குறிப்பிடத்தக்கது.

சுழற்பந்து வீச்சு என்றால் இந்திய பேட்ஸ்மேன்களுக்கு 'அல்வா' சாப்பிடுவது போல என்ற பேச்சை, இலங்கை வீரர் முத்தையா முரளிதரன் பொய்யாக்கினார். தனது 'தூஸ்ரா' பந்துவீச்சால் ஏழு விக்கெட்டுகளை வீழ்த்தி சிறப்பு சேர்த்தார் அவர். சீட்டுக்கட்டு போல இந்திய வீரர்கள் அடுத்தடுத்து சரிந்தனர். ஆட்டம் தொடங்கிய ஒன்றேகால் மணி நேரத்தில் இந்திய அணி இன்னிங்ஸை இழந்ததால், ரசிகர்கள் கடும் ஏமாற்றம் அடைந்தனர்.

முரளிதரன் 7 - 100: முரளிதரன் 38.4 ஓவர்களில் 100 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இரண்டாம் நாள் ஆட்டத்தில் அவரது பந்து வீச்சு விபரம் 10.4 - 4 - 4 23 - 5.

இந்தியாவுக்கு எதிராக அவரது சிறப்பான பந்துவீச்சாகவும் இது அமைந்தது. அதே நேரம் நாலாவது முறையாக இந்தியாவுக்கு எதிராக ஐந்து விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். மொத்தத்தில் 48 முறை ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். ஒட்டுமொத்தமாக இதுவரை 577 விக்கெட்டுகளைச் சேர்த்து அதிகபட்ச விக்கெட்டுகளை வீழ்த்தியோர் பட்டியலில், இரண்டாவது இடத்தில் உள்ளார் முரளிதரன். அப்பட்டியலில், அவுஸ்திரேலிய வீரர் வார்னே முதலிடத்தில் உள்ளார்.

சச்சின் 109: இரண்டாவது நாள் நடைபெற்ற ஆட்டத்தில் 35வது சதமடித்து உலக சாதனை படைத் சச்சின் டெண்டுல்கர், மேலும் ஒன்பது ஓட்டங்களையே சேர்த்து ஆட்டமிழந்தார். அவர் முரளிதரன் வீச்சில் எல்பிடபிள்யூ ஆனார். கவாஸ்கரின் சாதனை 34 சதங்கள் 125 ரெஸ்ட் போட்டியில், அந்த சாதனை 125 ரெஸ்ட் போட்டியில் 35 சதங்களாக புதிய சாதனை படைத்துள்ளார் சச்சின்.




YARL WINDOW
BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS
- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் ரவி நடராஜா
தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.
- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(16 Years Insurance Claims Experience)
416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON



EMBASSY
- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

416-332-8451
Finch / Middlefield, 5200 Finch Ave., Scarborough



# பாவனையில் இல்லாத இல்லம் வாங்கும் போது!

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர்-2 1 8

## VACANT HOUSES

பாவனையில்லாமல் இருக்கும் வீட்டைப்பற்றி கவனமாக இருத்தல்வேண்டும். பல எதிர்பாராத தாக்கங்கள் செலவுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன.

- **நிலத்தின் விரிவு (Soil Expansion)**

ஒழுங்காக பராமரிக்காத வீட்டின் புற்தரைகள் சூரிய வெப்பத்தால் (கோடைகாலத்தில் -Summer) ஈரத்தன்மையை சிறிது சிறிதாக இழந்துவிடும். இதனால் இயற்கையான நிலத்தின் ஈரத்தன்மை இழக்கப்பட்டு, நிலம் உலரத் தொடங்கும். இந்தவீட்டை வாங்கும், புதிய வீட்டாளர், தண்ணீரைச் செலுத்த தொடங்கும் போது, நிலம் விரிவடையும். இதனால் வீட்டின் நிலத்திற்கு கீழேயுள்ள சுவர் (Foundation Wall) தாக்கப்படச் சந்தர்ப்பம் உண்டு.

- **தண்ணீர் செலுத்திகள் வெடித்தல் (Pipes)**

குளிர்காலத்தில் பாவிக்கப்படாமல் இருக்கும் வீட்டின் வெப்பநிலை சாதாரணமாக இல்லாமல் இருந்தால் வெளியிலுள்ள வெப்பநிலை குளிர்நிலைக்கு போகும்போது குழாயிற்குள் (Pipes) உள்ள தண்ணீர் உறையத் தொடங்க சந்தர்ப்பம் உண்டு. தண்ணீர் உறையும் போது கனவளவு அதிகரிக்கும். இதனால் குழாய்கள் வெடிக்க சந்தர்ப்பம் உண்டு. எனவே பாவிக்காமல் இருக்கும் வீட்டின் வெப்பநிலையை குறைந்தது $15^0$c அளவிலாவது, வைத்திருத்தல் வேண்டும். பாரதூரமான பிரச்சினைகளை வராமல் தடுப்பதற்குரிய வழியாக இது அமையலாம். தண்ணீர் காவும் குழாய்கள் வெடிப்பதால் செலவுகள் மிகப் பாரதூரமாகவும் இருக்கலாம்.

### Water Heater

தண்ணீரை வெப்பமாக்கும் தாங்கி (Tank) தொடர்ந்து பாவிக்காமல் இருந்தால், தாங்கியில் தேங்கி நிற்கும் தண்ணீரில் Sediment படியச் சந்தர்ப்பம் உண்டு. இதனால் Water Heater தொடர்ந்து வேலை செய்வதில் தடங்கல் ஏற்படக்கூடும்.

### THERMAL EXPANSION

பாவிப்பனை இல்லாத வீட்டின் உட்புறத்தில் வெப்பநிலை சீரற்று காணப்படும். இதனால் ஜன்னலின் ஓரங்கள் (Frames, Hardware) போன்ற பகுதிகளில் வெடிப்புகள் ஏற்படச் சந்தர்ப்பம் உண்டு. மேலும் வெப்பநிநிலை மாற்றத்தால் பாவிக்கப்பட்ட மரங்களில் பழுது ஏற்படுவதால் Dry wall இனதும் Plastering இலும் வெடிப்புகள் ஏற்படலாம்.

### கூரை (ROOF)

கூரையிலிருந்து ஓடும் நீரை தகுந்த முறையில் அப்புறப்படுத்தாவிடின், நீர் தேங்கி நிற்கக்கூடிய சந்தர்ப்பம் உண்டு. இதனால் நீர் உள்ளே வரவும் சந்தர்ப்பம் ஏற்படலாம். நீர் உள்ளே வருவதால் கூரைக்கு கீழேயுள்ள Ceiling பகுதி பழுதடையும். இதனை திருத்துவதற்குரிய செலவு அதிகமாகலாம்.

### ரொறொன்ரோ நகரம்

ரொறொன்ரோ (Toronto), ஸ்காபரோ (Scarborough), நோர்த்யோர்க் (North York), ஈஸ்ற் யோர்க் (East York), எற்றோபிக்கோ (Etobicoke)

### யோர்க் பிரதேசப்பிரிவு

Aurora, East Guillcambury, Georgina, King, Markham, New Market, Richmondhill, Vangham, White Church, Stoville

### Durham பிரதேசப்பிரிவு

Oshawa, Whitby, Pickering, Ajax, Clarington, Brock, TownShip, Uxbridge, Township, Schgog Township

### Peel பிரதேசப்பிரிவு

Mississaiga, Brampton, Van

### Halton பிரதேசப்பிரிவு

Mississaga, Buifington, Milton, Haltonhills

மேலே காட்டப்பட்டுள்ள தரவுகளின் 2001 ஆண்டில் எடுக்கப்பட்டவை

2001ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தரவுகளின்படி, யோர்க் பிரதேசபிரிவு (York Region) இலேயே குறைந்தளவு வாடகையாளர்கள் வாழ்கின்றனர். (13.7%). ஆனால் ரொறொன்ரோ நகரப்பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கை 2.5 Million. 2005ஆம் ஆண்டில் ரொறொன்ரோ நகரசபையின் Budget 7.1 Billion, York Region Budget $1.5 Billion. ரொறொன்ரோ நகர சபையில் வசிக்கும் ஒவ்வொருக்கும் செலவு செய்யப்பட்ட தொகை $2,840, ஆனால் York Region இல் $2,661. ரொறொன்ரோ மக்களிற்குரிய செலவு அதிகமாகக் காணப்பட்டது. பொதுவாக ரொறொன்ரோ பகுதியில் வசதிகள் அதிகமாகக் காணப்படுகின்றது. கூடியளவு வைத்தியசாலைகள் உதாரணமாக கொள்ளலாம்.

மேலே ஒப்பீட்டளவில் ரொறொன்ரோவில் 2005இல் Property tax 3% இனாலும், York Region இல் 5.3% இனாலும் அதிகரிக்கப்பட்டது.

(குறிப்பு - York Region இல் காணப்படும் ஒவ்வொரு நகரப்பிரிவிற்குரிய Property Tax அதிகரிப்பு வித்தியாசமாக் காணப்படும். உதாரணம்: மார்க்கம் 3.9% Richmond Hill 4.9%)

ரொறொன்ரோ நகரசபைபிரிவானது வதி விடத்திற்கு குறைவாக வரியை வசூலிப்பதுடன், வியாபாரம், கட்டிடங்களுக்கு அதிகமாக வசூலிக்கின்றது. ஆனால் Area Code ஐ (905) ஐக்கொண்டு ரொறொன்ரோ பகுதியை சுற்றியுள்ள பிரதேசங்கள் வதிவிடங்களிற்கு வரியை அதிகமாக வசூலித்து ஒப்பீட்டளவில் வியாபாரங்கள், கட்டிடங்களிற்குரிய Property Tax குறைவாக வசூலிக்கின்றன.

இதனால் ரொறொன்ரோப்பகுதியிலுள்ள வியாபாரத்தை நடத்தும் தொழிலதிபர்கள் தமது தொழிலை வெளியே எடுத்துச் செல்கின்றனர். அதாவது ரொறொன்ரோவை விட்டு வெளியேறுகின்றன.







Finch/Warden
Condominium
Bedrooms: 2+1
2 Washrooms
Close to all amenities
Den Can Be Used As 3rd Bd Room




Whites/Sheppard
Detached 2- Storey
4 Bedrooms, 3 Washrooms
3100 Sq Ft, TTC, School,
Double Door Entry




Major Mc/Hwy 400
Detached 2- Storey
4 Bedrooms, 4 Washrooms
9 Foot Ceiling, TTC, School,
Jacuzzi, Oak Stair Case,
Separate Entrance To Bsmt




Neilson/Sheppard
Semi-Detached
2- Storey,3+1 Bedrooms, 2 Washrooms,
2 Kitchens, Sep Entrance,
Easy Access to Shopping, TTC



Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397

HOMELIFE/GTA Realty Inc.
1711 McCowan Rd, Suite 206, Toronto, ON, M1S-3Y 3., Office: 416-321-6969
145 Traders Blvd., Suite 28, Mississauga,ON,. Office: 905-712-2666

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling



Nantha Aiyadurai
Cell: 613 850 9931
Business: 613 823 7555 Fax: 613 825 8177
3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

COLDWELL BANKER
COBURN REALTY

BRIARGREEN



Asking Only:$299,900

# சிவபெருமானின் நாடகங்கள்

எல்லாம் வல்ல சிவபெருமான் நடனத்தைப் போலவே நாடகத்திலும் வல்லவர். நாடகம் என்பது நடந்த ஒரு சம்பவத்தை அல்லது கற்பனை நிகழ்வை நடித்துக் காட்டுவது. சம்பவம் அல்லது கதை பிற இலக்கிய வடிவங்களுக்கும் பொதுவாதலால் 'நடித்துக் காட்டுவது' என்னுந் தொடரே நாடக வடிவத்துக்கு முக்கியமாகின்றது. 'காட்டுவது' என்ற சொல் அரங்கத்தையும் அவையையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

சிவபெருமான் கதையை வைத்துக் கொண்டு நடிப்பதில்லை. அவர் எதனைச் செய்து காட்டுகின்றாரோ அதுவே எமக்குக் கதையாகின்றது. அவரது அரங்கம் 'அம்பலம்'. அம்பலம் என்றால் திறந்தவெளி அரங்கம் என்று பொருள். அம்பலம் அண்டசராசரத்தின் மையம் என்றும் அந்த மையமே சிதம்பரம் என்றும் சைவ சமயம் கூறுகின்றது.

சிவபெருமான் ஏன் நடிக்கின்றார்?

இதற்கு விடை 'உலகம் பலவிதம்' என்ற நாட்டு வழக்குத் தொடரில் அடங்கிக் கிடக்கிறது. இது 'உலகு அம்பல விதம்' என்ற கருத்தைக் கொண்டது. இதன் பொருள் அம்பலத்தில் நடைபெறும் இறைவனின் கூத்துக்கேற்பவே உலகம் இயங்குகிறது என்பது. அதாவது, சிவன் உலகத்தை இயக்குவதற்காகக் கூத்தாடுகின்றான். அவனது கூத்தால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களும் நடைபெறுகின்றன.

ஐந்தொழில்களால் உலகம் இயங்குகின்றது. இதுபற்றி இவ்வாசிரியர் எழுதிய 'சைவ சமயமும் நடனக் கலையும்' என்ற கட்டுரையிற் சற்று விரிவாகவே விளக்கப் பட்டுள்ளது. கூத்துக்கு மற்றொரு பெயர் நடனம்.

அம்பலத்துக் கூத்தனை நடனத்துக்கு அப்பாலும் வசனங்கள் பேசி நடிக்கும் ஒரு நாடக நடிகனாகப் புராணங்கள் சித்திரித்திருக்கின்றன. முக்கியமாக, கந்தபுராணம், பெரிய புராணம் (திருத்தொண்டர் புராணம்), திருவிளையாடற் புராணம் ஆகியவற்றிற் பல இடங்களிலே பலவித தேவைகளுக்காக இறைவன் வேறு கோலங்களில் நாடகமாடிய விவரங்கள் வருகின்றன. அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்குவாம்.

## கந்தபுராண நாடகங்கள்

கந்தபுராணத்திலே சிவபெருமான் தமது சக்தியாகிய உமாதேவியாரை முதலிலே தாட்சாயணி ஆகவும் பின்னர் பார்வதி ஆகவும் இருமுறை திருமணஞ் செய்த கதைகள் கூறப்படுகின்றன.

### 1. விளையாட்டு நாடகம்

தக்கன் சிவபெருமானைக் குறித்துக் கடுந் தவஞ்செய்து கேட்ட வரங்களில் உமாதேவியார் தனக்கு மகளாகப் பிறக்க, உரிய காலத்தில் சிவபெருமானே வந்து அவரைத் திருமணஞ் செய்யவேண்டும் என்பதுவும் ஒன்று.

உமாதேவியார் தக்கன் மகளாகத் தாட்சாயணி என்ற பெயரோடு வளர்ந்து வருகையில் உரிய காலத்தில் சிவபெருமானைப் பதியாக அடையத் தவஞ் செய்தார். சிவபெருமானும் தமது சக்தியுடன் விளையாட விரும்பி நாடகம் ஒன்றை ஆடத் திருவுளங் கொண்டார்.

மறையவர் வேடம் (இது அவர் மிகவே விரும்பும் ஒரு வேடம்) தாங்கித் தவச்சாலையை அடைகின்றார். தேவியார் அவரை வணங்கி வரவேற்கின்றார். பிரச்சினை ஆரம்பமாகின்றது.

மறையவர்: உன்னைத் திருமண முறையால் மனைவியாக அடைய வந்தேன்.
தேவியார்: அபசாரம்! நான் சிவபெருமானைக் கணவனாக அடையத் தவஞ் செய்கிறேன்.
மறையவர்: (நகைப்புடன்) எவராலும் அறியமுடியாத ஏக முதல்வன் உன்னை மணப்பது என்பது நடக்கமுடியாத செயல்.

தேவியார்: இறைவன் விரும்பி வந்து என்னை மணஞ் செய்யும்வரை தொடர்ந்து கடுந் தவஞ் செய்வேன்.
மறையவர்: மணஞ் செய்யாதுபோனால் ...
தேவியார்: எனது உயிரைத் துறப்பேன்! இது உறுதி! நீர் இவ்விடத்தைவிட்டுச் செல்வீராக!

மறையவர் செல்லாது நிற்கிறார். அதுகண்ட தேவியார் தாமே அவ்விடத்தைவிட்டு நீங்குகிறார். தேவியார் வெறுத்து நீங்குவது குறித்து மகிழ்வுற்ற பெருமான், தமது சுயவடிவத்தைத் தேவியாருக்குக் காட்டியருள்கின்றார்.



### 2. தவத்திறன் காட்டும் நாடகம்

இதேபோன்ற ஒரு நாடகத்தை இரண்டாவது திருமணக் காலத்திலும் இறைவர் நடித்திருக்கின்றார்.

இமயமன்னன் பராசக்தி தனக்குப் புதல்வியாக அவதாரம் செய்யவேண்டும் என்று சிவபிரானிடம் கேட்டுப்பெற்ற வரத்தின்படி அவனது தவச்சாலைக்குப் பக்கத்திலிருந்த பத்மை என்னும் தடாகத்திலே பராசக்தியார் அழகிய குழந்தையாகத் தோன்றினார். இமயவான் மகிழ்ந்து அவரை எடுத்துக் கண்ணுங் கருத்துமாக வளர்த்து வந்தான்.

அம்மையாருக்குச் சிவசிந்தனை மேலிடத் தவத்தில் ஈடுபடத் தொடங்கினார். அவரது தவத்தின் மகிமையை உலகத்தவருக்குக் காட்டுதற்பொருட்டு முதிய அந்தணக் கோலந் தாங்கித் தவச்சாலையை அடைந்தார் இறைவர். தேவியின் தோழியர் அவரை வரவேற்றனர். உரையாடல் நடந்த விதம் இது:

சிவபெருமான்: அம்மா, இந்தச் சின்ன வயதில் எதற்காகத் தவஞ் செய்கிறாய்?
தோழி: ஐயா, சிவபெருமானைத் திருமணஞ் செய்யும்பொருட்டு எமது தோழி தவம் இருக்கிறாள்.

சிவபெருமான்: பிரமனோ திருமாலோ அறியமுடியாத சிவபெருமானைச் சாதாரண பெண்ணால் அடைய முடியாது. அதனாலே தவத்தைக் கைவிடுவதே நல்லது.
பார்வதி: என் தவத்துக்கு இரங்கிச் சிவபெருமான் வருவார். வரவில்லையென்றால் மேலுங் கடுந் தவம் புரிவேனேயன்றித் தவத்தை ஒருபோதுங் கைவிடேன்.

சிவபெருமான்: சிவன் ஒரு பித்தன். விலங்குகளின் தோல்களை உடுப்பவன். மயானத்தில் வாழ்பவன். சாம்பலை மேனியிற் பூசுபவன். அத்தகைய ஒருவனை மணக்க விரும்பும் உனது புத்தியை என்னென்று சொல்வது!
பார்வதி: பெரியவரே! நெற்றியில் நீறும் கழுத்தில் உருத்திராட்சமும் அணிந்து கொண்டு இப்படியெல்லாம் பேசுவது வியப்பாக இருக்கிறது! தயவுசெய்து வெளியே செல்லவும்.
சிவபெருமான்: என்ன? வெளியே செல்வதா? நான் வந்ததே உன்னைத் திருமணஞ் செய்ய வல்லவா?

அதனைக் கேட்கப் பொறுக்காது பார்வதிதேவியார் தாமே தவச்சாலையை விட்டு வெளியேற முற்படுகையில் இறைவர் தமது திருவடிவைக் காட்டியருளினார்.

பின்னர் நடைபெற்ற திருமணமும் ஒரு நாடகந்தான். இறைவரும் பார்வதிதேவியாரும் திருமணஞ் செய்துகொண்டது திருமால், பிரமன், இந்திரன் முதலாய முப்பத்து முக்கோடி தேவர்களும் காலாக்கினி, வீரபத்திரர், கூர்மன் முதலாய பலகோடி உருத்திரர்களும் எட்டுத் திக்குப் பாலகர், சூரியர், சந்திரர், நட்சத்திரங்கள், சப்தமார், அட்டவசுக்கள், நாகர் முதலியோரும் தேவவுருக்கொண்டு வந்த வேதங்கள், ஆகமங்கள், மந்திரங்கள், பஞ்சபூதங்கள், உலகங்கள், நகரங்கள் போன்றோரும் கண்டு களிக்கவேயாம்.



**கவிஞர் வி. கந்தவனம்**

# சுதந்திரம்



விமானத் தளத்திலிருந்து
எனது அண்ணரின் வீடு நோக்கி
காரில் செல்லும்போது நள்ளிரவு
தெருவோரம் மக்கள்
படுத்து உறங்குகின்றனர்

"பாவம் உந்தச் சனங்கள்" என்றேன்

"எட தம்பி,
சிலவேளை உதுகளுக்கு மேலால
லொறியள் ஏறிச்செல்லும்
விடிய முன்னம் உடல்களை
கூட்டி அள்ளி அகற்றிவிடுவாங்கள்
மிச்சச் சனம் சொல்லுக் கேக்குமே
மீண்டும் உதிலதான் படுக்குங்கள்" என்று

விளக்கமளித்தார் என் அண்ணர்

சந்தைக்கு நடுவில் கழிவு நீர் ஓடுகிறது
அதன் இரு மருங்கும்
கீரைக்கட்டு வெண்டிக்காய் தக்காளி கத்தரிச்
சிறு கூறுகளுடன் குந்தி இருக்கும்
வறிய பெண் சிறிய வியாபாரிகள்

தோல் கறுத்த வாழைப்பழச் சீப்பில்
ஈக்கள் மொய்க்காமல்
வேப்பம் இலைக் கொப்பால் விசுக்கியபடி
சதங்களில் விலை கூறும்
வெற்றிலை வாய் சிவந்த மூக்குத்தி

நான்கு கறிவேப்பம் இலைக்கட்டை வைத்து
இதை விற்றால்தான்
இன்றைய சீவியம் என ஏங்கும்
கறுத்துச் சுருங்கிய இளங்கிழவி

எலும்புக்கூடுகள் எழும்பி உதையும்
றிக்ஷோ வண்டில்கள்

மூக்கைப் பொத்தியபடி
கூவம் கரையோரத் தெருவை
ஆட்டோவில் கடக்கும்பொழுது
ஆற்றோரம் கொட்டில்கள்
அவற்றிலிருந்தும் சமையல் புகை

தங்கூசியைத் தடியில் கட்டி
தூண்டில் போடுகின்றனர் சிலர்
மூழ்கி எழும்பி நீராடுகின்றனர்
மலம் கழிக்கும் குழந்தைகள்
பக்கத்தில் பட்டம் விடும் பிள்ளைகள்

கோடிகள் ரூபாய் ஏ.சி பங்களாவில்
அமைதியாகக் கொறட்டை விடும்

அரசியல்வாதிகள்.



**முத்துராஜா**




# மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டால் என்ன நடக்கும்?

இப்போது கிறிஸ்மஸ் காலம். வீதிகளில் வாகனம் ஓட்டுபவர்கள் யாவரும் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துபவர்களாகவே இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிசார் சந்தேக கண்கொண்டு சகலரையும் நோக்கும் காலம். கிறிஸ்மஸ் காலமோ? அல்லது எந்தக் காலமோ? இங்கு பொதுவாக மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டால் என்ன நடக்கும்?

• வீதியோரத்தில் வைத்து கைவிலங்கு மாட்டப்பட்டு, போதை முற்றாக முறியும் வரை, சிறையினுள் அடைக்கப்படும் நிலைமை!

• உடனடியாக வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு பின்னர் அதனை திரும்ப மீளப் பெறும் போது செலுத்த வேண்டிய அத்தியாவசிய மற்ற செலவுகள் என ஒரு தொகை.

• உடனடியாக பொலிசாரினால் 90 நாட்களுக்கு சாரதி அனுமதிப் பத்திரம் ரத்து! (90 நாட்களுக்கு பின்னர் நீதிமன்றத்தில் குற்றவாளி என நிரூபிக்கப்பட முன்பு அனுமதிப்பத்திரத்தினை திரும்ப தற்காலிகமாக மீளப் பெற இன்னொரு 150 டொலர் கட்டணம் செலத்தவேண்டும்)

• நீதிமன்றங்களுக்கு தொடர்ந்து வழக்குகள், பிரச்சினைகள், வக்கீல் செலவுகள் என ஒரு அலைச்சல். (இது $2000 - $10,000 வரை போகலாம்)

• தொடர்ந்து நீதிமன்ற தண்டனையாக பணத் தண்டனை & சிறைதண்டனை.

• தொடர்ச்சியாக பலகாலம் சாரதி அனுமதி பத்திரம் தடைசெய்யப்படும். நீதிமன்ற தீர்ப்பு தண்டனை காலம் முடிந்து அனுமதிப் பத்திரத்தினை மீளப்பெறும்போது இன்னொரு கட்டணம் $150. (licens Reinstatement Fees)

• நீதிமன்ற தண்டனைக்கு உட்பட்டவர் மீண்டும் தண்டனை காலம் முடிந்து வாகனம் செலுத்த தொடங்கும் போது, இக் குற்றத்திற்காக வாகன காப்புறுதிக்கு என செலுத்த வேண்டிய மேலதிக ஏராளமான கட்டணங்கள் (முதல் மூன்று வருடங்களுக்கு $4,500. வருடம் ஒன்றுக்கு மேலதிகமாக செலுத்த வேண்டும்.)

• நீதிமன்ற தண்டனைக்கு உட்பட்டவர் மீண்டும் தண்டனை காலம் முடிந்து அனுமதிபத்திரம் மீள பெற்று வாகனம் செலுத்த தொடங்கும் போது மேலதிக பணம் செலுத்தி சட்டரீதியாக வாகனத்தில் பொருத்த வேண்டிய மது போதை அபாய அறிவிப்பு கருவி (Ignition Inter Lock Program)

• மற்றும் கட்டாய பணம் செலுத்தி போக வேண்டிய கல்வி திட்டம் (Mandatory Alcohol Education & Treatment program).

இப்படி மேற்குறிப்பிட்ட ஏராளமான பிரச்சினைகள் மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபடும் ஒவ்வொருவரும் எதிர் கொள்ள வேண்டிவரும் என்பது ஏற்கனவே எதிர்கொண்டவர்களை கேட்டு அறிந்து கொண்டால் மிக திறமையான அனுபவமாக இருக்கும்.

இங்கு கட்டாயமாக சமூகம் அளிக்க வேண்டி 'Mandatory Alcohol Education & Treatment Program' என்றால் என்ன என்பதனை பார்ப்போம்.

அதாவது மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டு நீதிமன்ற தண்டனைக்கு உட்பட்டு தங்கள் சாரதி அனுமதி பத்திரத்தினை இழந்தவர்கள் ஆங்கிலத்தில் 'Back on Track' என குறிப்பிடப்படும் இக் கல்விதிட்டத்திற்கு கண்டிப்பாக சமூகம் அளித்து, அதில் சித்தியடைந்து விட்டார் என்ற பத்திரம் பெற்ற பின்பே தடை செய்யப்பட்ட அனுமதிபத்திரத்தினை மீள மனு செய்து பெறமுடியும். இக்கல்விதிட்டத்திற்கு $475 + வரி செலவு என ஒரு பண தொகையினை செலுத்த வேண்டும். சுமார் எட்டு மணித்தியாலங்கள் அல்லது ஒரு நாள் முழுவதும் நடத்தும் இம் மதுபோதையினால் ஏற்படும் விளைவுகள் பற்றிய பாசறை வகுப்பில் விளைவுகள், விளைவுகளினால் ஏற்படும் ஆபத்துக்கள், பாதிப்புக்கள் பற்றிய போதனை யுடன், தொடர்ந்து நேர்முக பரீட்சைகள் நடைபெறும். நேர்முகப்




சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


பரீட்சையில் மேற்கொள்ளும் மதிப்பீட்டினை அடிப்படையாக வைத்து, சில நேரங்களில் இப்பயிற்சி நெறிக்கும் கட்டுபடாதவர்களை மனநோய் டாக்டர்களின் சிகிச்சைகளுக்கு அனுப்புவார்கள்.

(சரி, இங்கு ஏற்கனவே மது போதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டு அனுமதிப்பத்திரத்தினை இழந்தவர்கள், தங்கள் தண்டனை காலம் முடிவடைந்து விட்டால், அனுமதி பத்திரத்தினை மீள பெறுவதற்கு இப்பயிற்சி திட்டத்திற்கு பதிவு செய்ய தகவல் தெரியவில்லையானால் 1-888-814-5831, அல்லது 416-595-6593 என்ற தொலைபேசியினை அழைத்து விண்ணப்ப படிவங்களை பெற்று நிரப்பி, பணத்தினையும் சேர்த்து அனுப்பி, பாசறை வகுப்புக்கு பதிவு செய்து கொள்ளுங்கள். எந்த சந்தர்ப்பத்தி லும் இந்த பாசறை திட்டத்திற்கு போகாமல் அனுமதிபத்திரத்தினை புதுப்பிக்க முடியாது.)

இது தவிர மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபட்டு தண்டனைக்கு உள்பட்டவர்கள் மீண்டும் தண்டனை காலம் முடிந்து அனுமதிபத்திரத்தினை பெற்று வாகனம் செலுத்த தொடங்கும் போது தங்கள் வாகனத்தில் 'Ignition Interlock' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் மதுபோதை அறிவிப்பு கருவி பொருத்த வேண்டும் என்ற சட்டம் டிசம்பர் 23ஆம் திகதி 2001 இல் இருந்து அமூல் நடத்தப்பட்டு வருகின்றது. அதாவது மதுபோதையில் அதிகமாக இருப்பவர்கள், வாகனத்தில் பொருத்தப்பட்ட இக்கருவியினை சாரதியின் ஆசனத்தில் இருந்து எடுத்து வாயால் ஊதி சுவாசத்தினை வெளி விடும் போது, போதையின் அளவு வரம்பினை மீறி காட்டினால் வாகனம் இயங்காது தடை-செய்யும்.

இதனை வாகனத்தில் பொருத்தும் செலவு மட்டும் $1,300 டொலர் வரை ஏற்படும். இதனை வாகனத்தில் பொருத்த வேண்டிய நிலைமையில் இருந்து எதிர்பார்ப்பவார்கள் 1-866-658-6374 என்ற தொலைபேசியை அழைக்கும் போது அதற்குரிய உதவிகளை செய்வார்கள். மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்தி அனுமதிபத்திரத்தினை ரத்து செய்யப்பட்டவர்கள், அல்லது வேறு எந்த குற்றவியல் சட்டங்களின் பிரகாரம் அனுமதிபத்திரம் ரத்து செய்யப்பட்டவர்கள் வாகனம் செலுத்தி பிடிபட்டால், அவர் செலுத்திய வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு அந்த வாகனம் 45 நாட்கள் வரை திருப்பி கொடுக்கப்படமாட்டாது. அதனை திரும்ப பெறும் போது அந்த 45 நாட்களும் வைத்திருந்த கட்டணங்களை செலுத்தியே வாகனத்தினை திரும்ப மீள்பெறலாம். குற்றத்திற்கான தண்டனை பணம் $5,000 - $50,000 வரை உருவாகலாம்.

எனவே தங்கள் வாகனத்தினை இன்னொருவர் ஓட்டுவதற்கு வழங்க வேண்டுமானால் அவரின் அனுமதிபத்திரம் ரத்து செய்யப்பட்டதா? இல்லையா? என்பதனை அறிந்து கொள்ள அழைத்து முதலில் பரிசீலனை செய்ய வேண்டிய இலகுவான தொலைபேசி இலக்கம் 1-900-565-6555. ஒரு அழைப்புக்கு $2.50 தொகை பணம் தொலைபேசி கட்டணமாக அறவிடப்படும். இங்கு வாகனம் இந்த நிலைமையில் பறிமுதல் செய்யப்படும் போது பாதிக்கப்படுவர் வாகனத்தின் சொந்தக்காரரே ஆவார் என்பது இங்கு முக்கியமான விடயமாகும். மேற்குறிப் பிடப்பட்ட விடயங்கள் தவிர தண்டனைகள் எவ்வாறு இருக்கும் என்பதனை பார்ப்போம்.

**முதலாம் முறை மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபடும் போது தண்டனைகள்.**

- உடனடி 90 நாட்கள் அனுமதிபத்திரம் ரத்து.
- நீதிமன்ற தீர்ப்பின் பின்பு ஒருவருடம் அனுமதிபத்திரம் ரத்து.
- ஒரு வருடம் நன்னடத்தை பிணை தண்டனை.
- குறைந்தது $5,000 - $25,000 டொலர் வரை பண தண்டனை.
- கட்டாய பயிற்சி பாசறைக்கும் சிகிச்சை திட்டங்கள்.
- குறைந்தது ஒரு வருடத்திற்கு மதுபோதை அபாய அறிவிப்பு கருவி வாகனத்தில் பொருத்துதல்.
- வாகனக் காப்புறுதிக் கட்டணம் அதிகரிப்பு

**வாழ்வில் மீண்டும் இரண்டாம் முறை மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபடும் போது தண்டனைகள்.**

- உடனடி 90 நாட்கள் அனுமதிபத்திரம் ரத்து.
- நீதிமன்ற தீர்ப்பின் பின்பு மூன்று வருடங்கள் அனுமதிபத்திரம் ரத்து.
- இருவருடங்கள் நன்னடத்தை பிணைத் தண்டனை.
- குறைந்தது 14 நாட்கள் சிறைவாசம்.
- கட்டாய பயிற்சி பாசறைகளும் சிகிச்சைகளும்.
- குறைந்தது மூன்று வருடங்களுக்கு மது போதை அபாய அறிவிப்பு கருவி வாகனத்தில் பொருத்தல்.
- வாகனக் காப்புறுதிக் கட்டணம் அதிகரிப்பு
- பணதண்டனை $10,000 - $50,000.

**வாழ்வில் மூன்றாம் முறையும் மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபடும் போது தண்டனைகள்.**

- உடனடி 90 நாட்கள் அனுமதிபத்திரம் ரத்து.
- நீதிமன்ற தீர்ப்பின் பின்பு வாழ்நாள் முழுவதும் அனுமதி பத்திரம் ரத்து. (பத்து வருடங்களின் பின்பு புதுப்பிக்கப்படும் சந்தர்ப்பம் உண்டு.)
- 90 நாட்கள் சிறைவாசம்.
- மூன்று வருடம் நன்னடத்தை பிணை.
- பணதண்டனை $10,000 - $50,0000.
- வாகனக் காப்புறுதிக் கட்டணம் அதிகரிப்பு

**வாழ்வில் நான்காம் முறையும் மதுபோதையில் வாகனம் செலுத்தி பிடிபடும் போது தண்டனைகள்.**

- வாழ்நாள் முழுவதும் அனுமதிபத்திரம் ரத்து.
- 90 நாள் சிறைவாசம்.
- பணதண்டனை $10,000 - $50,000.

வாகனம் செலுத்தும் ஒருவரின் குருதியில் குறிப்பிட்டளவுக்கு மேல் மதுபோதையின் அளவு இருந்தால் மட்டும் இங்கு குற்றமாக கருதப்பட்டாலும், G2 அனுமதிபத்திரம் என சில வருடங்களுக்கு மட்டும் தற்காலிக அனுமதிபத்திரம் வைத்திருப்பர்கள் இந்நிலைமையில் பிடிபடும் போது ஒரு சிறுதுளி வீதமேனும் மது குருதியில் இருந்தால் மேற்குறிப்பிட்ட கைவிலங்கு போடப்படுகின்ற பிரச்சினை களுக்குள் இருந்து தப்பமுடியாது.

மதுபானம் அருந்திய ஒருவர் வாகனம் ஓட்டி செல்லும் போது, தமது நிலைமை மோசமாக உள்ளது என புரிந்தால் வாகனத்தினை ஓரமாக வீதியில் அல்லது எங்கேயாவது நிறுத்தி விட்டு பின்ஆசனத்தில் வந்து இருந்து சற்று நேரம் போதை போகும் வரை ஓய்வு எடுக்கலாம். நிலைமையினை நேரே வந்து பார்க்கும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவருக்கு, மதுபோதை யில் வாகனம் செலுத்த முடியாது என தெரிந்து தொடர்ந்து ஓட்டாமல் சற்று ஓய்வு எடுத்து கொள்கின்றார் என்பது புரியும். எதுவிதமான தண்டனையும் இல்லை. இலகுவாக தப்பி கொள்ளலாம். ஆனால் வாகனம் செலுத்தி கொண்டிருக்கும் போது பிடிபட்டால் மட்டுமே தண்டனை. எனவே இந்த நிலைமையில் சிறந்த முடிவு! "மது பானம் அருந்தினால் வாகனம் ஓட்டாமல் விடுவது" அல்லது வாகனம் ஓட்டுவதாக இருந்தால் மது அருந்தாமல் விடுவது நல்லது.






மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

# Niru BRAND®

## எமது புதிய அறிமுகங்கள்




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312

# 10,000 BLACK MEN NAMED GEORGE (2002)

எமது கடந்து வந்த பாதையை நாம் அறிவது, எமது அடையாளத்தை அழுத்தமாக வெளிப்படுத்துவதுடன், எமது புதிய சந்ததி யினருக்கும் எமது முட்கள் நிறைந்த பாதையை அறிமுகப்படுத்துவதாகும்.

அமெரிக்காவில் கறுப்பினமக்கள் கடந்து வந்த பாதை பயங்கரமானது. அடிமைகளாக பலவித தொல்லைகளையும் அனுபவித்து இன்று நிமிர்ந்து நிற்கின்றார்கள். அவர்களது சரித்திரத்தை கூறும் பல படங்கள் வெளிவந்துள்ளன. அவ்வரிசையில் வெளிவந்த மற்றொரு படமே 10,000 Black Men Named George. படத்திற்குள் செல்வதற்கு முன்பு இருவரைப் பற்றிய சிறு அறிமுகம் தேவை.

## George Pullman (1831 - 1897)

Buffalo க்கு அருகில் உள்ள Brocton என்ற நகரில் மூன்றாவது பிள்ளையாக பிறந்தார். இவரது தந்தை மர வேலைகள் செய்பவர். இவரது சகோதர, சகோதரிகள் மொத்தம் பத்து பேர்.

George நாலாம் வகுப்புடன் தனது படிப்பை நிறுத்திக் கொண்டார். பின்னர் இவரது மாமனாரின் கடையில் வேலை பார்த்து வந்தார். 17 வயதில் தனது தந்தையுடனும், இரு சகோதரர்களுடனும் இணைந்து Cabinet maker ஆக வேலை பார்த்தார். இவரது தந்தை ஒரு Baptist ஆகவும், தயார் ஒரு Presbyterian ஆகவும் இருந்தமையினால் இவர் எந்த Church ஐயும் சேராமல் இருந்தார். பின்னர் "God is Love" என்ற வாசகத்துடன் தொடங்கப்பட்ட Universalist Church இல் இணைந்தார்.

1853இல் தந்தை இறந்த பின்னர், குடும்ப தொழிலை பொறுப்பேற்று நடத்தினார். அப்பொழுது இவருக்கு Train -Sleeping car இல் ஆர்வம் ஏற்பட்டது. பின்னர் முன்னாள் New York State Senator Benjamin C. Field னுடன் இணைந்து Sleeping Car உற்பத்தி செய்யத் தொடங்கினார்.

1860 இவர் பல தொழில்களில் முதலீடு செய்யத் தொடங்கினார். ஆனால் பிரதானமாக Sleeping Car உற்பத்தியில் இவர் பிரகாசிக்கத் தொடங்கினார். 1867 இல் Pullman Palace Car Company நிறுவனமயமாக்கப்பட்டது. 1875 இல் இவரது நிறுவனம் சுமார் 720 Sleeping Car க்கு சொந்தமாக விருந்தது.

இவர் மதத்துக்குள் உள்ள வேறுபாடுகளை எதிர்த்தார். Chicago இல் பல தொழில்நுட்ப பாடசாலைகளுக்கு உதவித்தொகை வழங்கினார்.

Civil யுத்தத்தின் பின்னர் குறிப்பாக முதன்முதலாக அமெரிக்காவில் உள்ள மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான இவரது நிறுவனம் கறுப்பு இனத்தவரை, Porters, ஆகவும் Waiters ஆகவும் வேலைக்கு சேர்த்தது. இங்கு சம்பளம், சலுகைகள், வெள்ளை இனத்தவருக்கு நிகராக இருந்தது.

பொதுவாக இவ்வேலைகள் வெள்ளையருக்கு உரியதாக இருந்தது. 1880 இல் இவர் 4,000 ஏக்கரில் சிக்காகோவில் ஒரு மாதிரி நகரை நிர்மாணித்தார். இங்கு அமைக்கப்பட்ட தொழிற்சாலையில் புகையிரத கார் உற்பத்தி, சக்கர உற்பத்தி என்பன நடைபெற்றன. தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இந்த வீடுகளின் வாடகையாக சம்பளத்தில் பெரும் பகுதி அறவிடப்பட்டது. இங்கு 4,000 புத்தகங்கள் கொண்ட நூலகமும் அமைக்கப்பட்டது.
இவர் தொழிற்சங்கங்களை எதிர்த்தார். பல தடவைகள் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. 1894 இல் இவர் Eugene V. Deb's அமெரிக்க புகையிரத தொழிற்சங்கத்தால் பெருத்த எதிர்பார்ப்பை சம்பாதித்தார். சுமார் 100,000 தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அமெரிக்க அரசு இராணுவத்தை அனுப்பி தபால் விநியோகம் தாமதமாகாமல் இருக்க உறுதி செய்து கொண்டது. இதன் போது ஏற்பட்ட கலவரத்தில் ஆறுபேர் கொல்லப்பட்டனர். Illinois கவணர் தொழிலாளி களுக்கு நட்ட ஈடு வழங்குமாறு கேட்ட பொழுது மறுத்து விட்டார். இதன் பின்னர் எற்பட்ட விசாரணையில் இவரது நிறுவனம் பலவித குற்றங்களை புரிந்ததாக கண்டு பிடிக்கப்பட்டது. புகையிரத கார் உற்பத்தி தவிர்ந்த ஏனைய வியாபாரங்களை விற்குமாறு உத்தர விடப்பட்டது.

1897 இல் இவர் மாரடைப்பால் காலமானார். ஒரு காலகட்டத்தில் கறுப்பின மக்களை ஆதரித்த இவர், மறுபுறத்தில் தொழிலாளர் உரிமைகளை மறுத்து, எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டார். ஒவ்வொரு வெற்றிகரமான கறுப்பின குடும்பத்தின் பின்னணியில் ஒரு Pullman Porter இருந்துள்ளார் என்று கூறுமளவிற்கு இவர் கறுப்பின மக்களுக்கு உதவி புரிந்துள்ளார். 1900 ஆண்டளவில் கறுப்பின தொழிலாளிகளை அதிகளவு கொண்ட நிறுவனமாக Pullman நிறுவனம் கருதப்பட்டது. 1926 35% ஆன Pullman கறுப்பின தொழிலாளர்கள் சொந்த வீடுகளை வைத்திருந்தனர்.

## A. PHILIP RANDOLPH (1889 - 1979)



• அமெரிக்காவின் மிகவும் பயங்கரமான கறுப்பின மகன் என கருதப்பட்டார்.

• சுமார் 250,000 தொழிலாளர்கள் கலந்து கொண்டு Washington சென்ற ஊர்வலத்துக்கு தலைமை வகித்தார். (1963)

• இவர் கறுப்பின மக்கள், வறிய வெள்ளையினத்தவர், Puerto Ricans, Indians, மெக்சிக்கன் போன்றோரது உரிமைகளுக்காக போராடினார்.

• கறுப்பின தொழிலாளர்களை ஒன்று திரட்டி தொழிற்சங்கங்கள் அமைத்தார்.

• இவர் ஒரு உண்மையான சராசரி வாரந்த சம்பளக் காசோலை முதலில் முக்கியம் என கருதினார். அதில் வெற்றி பின்னர் ஏனைய தொழிலாளர் நலன்களுக்காக போராட வேண்டும் என்று கருதினார்.

• 1920 அமெரிக்க Marcus Garvey இன் 'Return to Africa' கறுப்பினத்தவருக்கு எதிரான கோஷத்துக்கு எதிராக குரல் கொடுத்தார்.

• 1941 June மாதம் (Pearl Harbour) தாக்கப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க அதிபர் Franklin D. Roosevelt நிறுவனத்துக்கு எதிரான சட்டம் ங்களில் கைடச்சாத்திட்டார்.

• "March on Washington" அமெரிக்க அதிபரை தொழிலாளர்களுக்காக சார்பாக தலை குனியச் செய்தது.

• இவர் இராணுவம், கடல்படை போன்றவற்றில்

தாயகம்

வானரன்




நிறவாதத்துக்காக குரல் கொடுத்தார்.

• Aug. 25, 1925 - பல தொடர்ச்சியான கூட்டங்களின் பின்னர் Pullman Company இல் கறுப்பின மக்களுக்கான தொழிற்சங்கம் அமைக்கப்பட்டது. Brother hood of sleeping car porters என்பதே அவ் அமைப்பு.

• 1936 இல் National Negro Congress அமைக்கப்பட்டது. இதன் முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

• Messenger என்ற சோசலிச சஞ்சிகையை 1917 இல் ஆரம்பித்து வெளியிட்டார்.

• அமெரிக்காவின் தொழிற்சங்க வரலாறு காட்டும் பாடம் - வெள்ளை, கறுப்பு என்ற பிரிவை விட நிறப்பாகுபாடற்று தொழிலாளர்கள் நசுக்கப் பட்டார்கள் என்பது உண்மையே. இவர்கள் இணைந்த தொழிற்சங்கம் உறுதியானது பலமானது என நம்பினர் Randolph.

• முதலாம் உலகப்போரின் போது அமெரிக்காவால் முன் வைக்கப்பட்ட "Making the world safe for Democracy" பொய்யானது என பிரசாரம் செய்தார். எனினும் அப்பொழுது கறுப்பினத்தவர் வாக்குரிமை இல்லாமையால் எதுவும் செய்ய முடியாது இருந்தது.

• முதலாம் உலகப் போரின் போது கறுப்பின மக்களை போரில் இணைய வேண்டாம், உங்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டுவிட்டன என குரல் கொடுத்தார்.

### இனி படத்துக்கு வருவோம்.

George Pullman முதலாளி. கறுப்பினம க்களை வேலையில் சேர்த்துக் கொண்டவர். இரண்டா மவர் Philip Randolph தொழிற்சங்கவாதி.

1920 களில் Philip Randolph George Pullman உருவாக்கப்பட்டு வாரிசுகளால் நடத்தப்படும் Pullman நிறுவனத்தில் கறுப்பின தொழிற்சங்கம் ஒன்றை அமைக்க முனைந்தார். இந்த நிறுவனத்தின் Train Sleeping காரில் மிகவும் கடினமான வேலைகளுக்கு இவர்கள் தள்ளப்பட்டனர். ஆனால் இவர்களது சம்பளம் மிக, மிகக் குறைவு. இவர்கள் George என அழைக்கப்பட்டனர். George Pullman இவர்களை முதன் முதலாக வேலைக்கு சேர்த்தவர். வேறு எந்த நிறுவனமும் கறுப்பின மக்களை சேர்க்கவில்லை. எனவே கேலியாக George என்று அழைத்தனர். இது ஒரு நிறவாதக் கோஷம்.

Philip இன் மனைவியார் ஒரு Beauty Saloon நடத்துபவர். இதில் வரும் வருமானத்தில் இவர் Messenger என்றதொழிற்சங்க பத்திரிகையை யும், தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். Saloon தொழிற்சங்க கூட்டங்களுக் கும் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் இவர்களில் ஒருவராக இணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டார். Aug. 25, 1925 இல் இந்த தொழிற்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. பல தடைகள், வெறித்தனங்களை மீறி இது அமைக்கப்பட்டது. இவர்கள் எவ்வாறு இதனை சாதித்தார்கள் என்பதையே இப்படம் பதிவு செய்துள்ளது.

இவர்கள் பதித்த சுவடுகளே எமக்கு இன்று தொழிலாளர்கள் நலன்களுக்கும், நிறவாத எதிர்ப்புக்கும் பயன்படுகிறது. இந்த பாதையை நன்றியுடன் நினைவு கூர வேண்டியுள்ளது. ஒரு விவரணத் திரைப்படம் போலல்லாது, விறுவிறுப்பாக இயக்கியுள்ளார் Robert Townsend. இதல் Randolph ஆக Andre Brausher சிறப்பாக நடித்துள்ளார். இதில் சிறப்பாக நடித்த மற்றொருவர் Kenneth Mcgreggor. Barton Davids என்ற Pullman நிறுவனத்தலைவராக சிறப்பாக நடித்துள்ளார்.

எங்கள் பலருக்கு தொழிற்சங்கம் வேலை இழப்புக்கள் என்பன புதியதல்ல. தொழிற்சங்கத்தலைவர்களை வியாபார முகவர்கள் வாங்க முற்படுவது, வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவோரை வேலைநீக்கம் செய்வது போன்றவை புதியனவல்ல. ஆனாலும் 1920 களில் இது சாதாரண விடயமல்ல. அதுவும் வாக்குரிமை மறுக்கப்பட்ட, அடிமைகள் என கருதப்பட்ட கறுப்பின மக்களால் தொழிற்சங்கம் அமைப்பது என்பது சர்வ சாதாரணமல்ல. கடந்த இலங்கை ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தமிழர்கள் மறுத்துள்ளனர். அல்லது வாக்களிக்கவில்லை. அன்று முதலாம் உலகப்போரில் கறுப்பின மக்கள் பங்குபற்றவில்லை. அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டபோது, ஏன் அவர்கள் அந்த நாட்டிற்காக போரிட வேண்டும்.?

இப்படம் ஏனோ பல திரையரங்குகளை எட்டவில்லை. Feb. 24, 2002 தொலைக்காட்சியில் காட்டப்பட்டது. நாம் அனைவரும் கட்டாயம் பார்க்க வேண்டிய படம். இப்படத்தின் பிரதிகளை உங்களுக்கு அருகில் உள்ள நூலகத்தில் அல்லது Markham & Tuxedo Court இல் உள்ள N.N.Video இல் பெற்றுக்கொள்ளலாம்.


ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்



Kanthan: 416.291.3997





• No Spraying • No Smelling • No Moving

# ஒன்ராரியோ மாகாணத்தில் ஏனைய நாடுகளில் வாகனம் செலுத்திய அனுபவங்களின் பிரதிபலிப்பு

பொதுவாக வாகனம் ஒன்ராரியோ மாகாணத்தில் செலுத்த விரும்பும் ஒவ்வொருவரும் பதினாறு வயதினை அடைந்திருந்தல் வேண்டும் என்பதும் இவ் வயதினை அடைந்தவர்கள் அல்லது புதிதாக வாகனம் செலுத்தக் கற்றுக் கொள்பவர்கள் முதலில் கண்பார்வைக்கான பரிசோதனைகள் (Vision Test) மற்றும் வாகனம் செலுத்துவதைப் பாதிக்கும் மருத்துவ தகவல் ஆகிய பரிசோதனையின் பின்பு எழுத்துப் பரீட்சையில் (Written Test) சித்தியடைந்து G1 என்னும் வாகனம் ஓட்ட கற்றுக் கொள்ளும் அனுமதிப் பத்திரம் பெற்று இரண்டு வீதிப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு சில காலங்கள் தாமதித்து நன்கு பயிற்சி பெற்றே தோற்ற வேண்டுமென்பது பொதுவாக யாவரும் அறிந்த விடயம் ஆகும்.

மேற்குறிப்பிட்ட நிலையிலிருந்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து ஒரு வருடத்தின் பின்பே முதலாவது வீதிப்பரீட்சைக்கு தோற்ற வேண்டுமென்பது ஒரு விதி முறையாகும். இவ்விதியிலிருந்து சற்று மாறுதலாக ஓர் அங்கீகரிக்கப்பட்ட சாரதிப் பயிற்றுனர் கல்விக்கூடத்தில் பதிவு செய்து முழுமையான வாகனம் ஓட்டும் ஒரு பயிற்சி நெறிக்கு தோற்றி வாகனம் ஓட்டுதல் தொடர்பான கோட்பாடுகள், சட்டவிதிகள், ஒழுங்குகள், முன்னுரிமைகள் போன்ற விடயங்களை வகுப்பறையில் இருந்து கற்று (Theory class) தொடர்ந்து வாகனத்திலும் பயிற்சி பெற்ற பின்பு அதற்குரிய சான்றிதழ்களைப் பெற்று எழுத்துப்பரீட்சை முடிவடைந்து எட்டுமாதங்களின் பின்பு முதலாவது வீதிப்பரீட்சைக்கு தோற்ற முடியுமென ஒரு விதிவிலக்குண்டு என்பது ஒரு சாதகமான விடயமாகும்.

முதலாவது வீதிப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் சுயமாக ஒருவரின் உதவியுமின்றி வாகனம் செலுத்தி ஒரு வருடத்தின் பின்பு இரண்டாவது வீதிப்பரீட்சைக்கு தோற்ற முடியுமென்ற விதிகளுக்கு ஒரு விதிவிலக்காக உள்ளதே ஏனைய நாடுகளில் வாகனம் ஓட்டிய அனுபங்கள் ஆகும்.

ஏனைய நாடுகளின் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்கள் கனடாவில் தாம் வசிக்கும் மாகாணத்துக்கு புதிதாக வந்திருந்தால் வந்த நாளிலிருந்து முதல் அறுபது நாட்களுக்கும் அந்த குறிப்பிட்ட நாட்டு அனுமதிப் பத்திரம் உபயோகித்து இவ் ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்தலாம் என்று மாகாண போக்குவரத்து அமைச்சின் மின்கணினி தகவல் மையம் (Website) மூலம் தெளிவாக தெரிவித்துள்ளார்கள்.

அறுபது நாட்களின் பின்பும் வாகனம் செலுத்த விரும்பினால் ஒன்ராரியோ மாகாணத்தின் சட்டபூர்வமான அனுமதிப்பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அதாவது ஒழுங்கு முறையில் எழுத்து பரீட்சைகள், வீதி பரீட்சைகளில் சித்தியடைந்து அனுமதிப்பத்திரம் பெற்று இருத்தல் வேண்டும். வேறுநாட்டு சாரதி அனுமதி பத்திரம் வைத்திருப்பது கனடிய ஒன்ராரியோ மாகாண சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யும் போது எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து (Written Test) காலதாமதமின்றி வீதிப்பரீட்சைக்கு செல்லும் வழிவகையே இங்குள்ள மிகப்பெரிய அனுகூலமாகும்.

அதாவது கடந்த மூன்று வருடங்களில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட இன்னொரு நாட்டு சாரதி அனுமதி பத்திரம் வைத்திருந்தால் நேரடியாக இரண்டாவது வீதிப்பரீடசைக்கு ஒருமுறை மட்டும் தோற்றுவிக்கலாம். அதில் சித்தியடையாவிட்டால் காலதாமதமில்லாது முதலாவது வீதிப்பரீட்சைக்கு தோற்றுவித்து அதில் சித்தியடைந்து காலத்தடையின்றி இரண்டாவது வீதிப்பரீட்சைக்கு தோற்றலாம்.

இங்கு ஏனைய நாட்டு வாகன அனுமதிப்பத்திரம் கடந்த மூன்று வருடங்களில் இரண்டு வருடங்களுக்கு உட்பட்டதாயிருந்தால் காலதாமதமில்லாது முதலாவது வீதிப்பரீட்சைக்கு மட்டும் தோற்றி அதில் சித்தியடைந்து இரண்டாவது வீதிப்பரீட்சைக்கு தோற்றலாம். (இந்நிலையில் நேரடியாக இரண்டாவது வீதிப்பரீட்சைக்கு தோற்றமுடியாது. ஏதோ ஒரு ஏனையநாட்டு வாகன அனுமதிப்பத்திரம் வைத்திருப்பதென்பது வீதிப்பரீட்சைக்கு இங்கு தோற்றும் கால-தாமதமென்ற நிலையிலிருந்து ஒரு சிறு விடுதலையினை இங்கு தருகிறது. இதுவே இங்குள்ள ஓர் அனுகூலமாகும்.

ஆனால் பின்வரும் நாடுகளின் சாரதி அனுமதி பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு ஒன்ராரியோ மாகாணத்தில் எழுத்துப் பரீட்சையும் வீதிப்பரீட்சையும் கிடையாது. கண்பார்வை பரிசோதனை (Vision Test) மற்றும் உடல்நிலை தகவல் பரிசோதனைகளுடன் அந்த நாட்டு சாரதி அனுமதிப் பத்திரத்தினை காண்பித்து நேரடியாக ஒன்ராரியோ மாகாண சாரதி அனுமதிப்பத்திரத்தினை கையில் வைத்துக்கொள்ள முடியும். அந்நாடுகள் பின்வருமாறு.

**1. ஜப்பான், 2. அமெரிக்கா, 3. கொரியாக, 4. சுவிட்சலாந்து, 5. ஜேர்மனி, 6. பிரான்ஸ், 7. பிரித்தானியா, 8. அவுஸ்திரேலியா.**

ஆரம்ப காலங்களில் கனடாவிலுள்ள ஏனைய மாகாணங்களினதும் அமெரிக்காவிலுள்ள சகல மாநிலங்களினதும் சாரதி அனுமதிப் பத்திரங்களை மட்டும் அங்கீகரித்து வந்த ஒன்ராரியோ மாகாண அரசு பின்னர் மேற்கூறிய ஏனைய நாட்டு சாரதி அனுமதிப் பத்திரங்களையும் அங்கீகரிக்கத் தொடங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட நாடுகளின் வாகன அனுமதிப் பத்திரங்கள் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டதாக இருந்தால் நேரடியாக G சாரதி அனுமதிப் பத்திரமும் இரண்டு வருடங்களுக்கு உட்பட்டதாயிருந்தால் G2 என்ற குறிப்பிட்ட தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரம் ஐந்து வருடங்களுக்கு வழங்கப்படும்.

இவ்வாறு மாற்றப்பட்டவர்கள் இவ் ஐந்து வருடங்களுக்கு இடையில் இரண்டாவது வீதிப்பரீட்சைக்கு தோற்றி முழுமையான "G" (Graduation Licence) சாரதி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்று கொள்ள வேண்டும். இதே சட்ட ஒழுங்கின் அடிப்படையிலேயே ஏனைய பாரிய ட்றக் வண்டிகள் (Truck), பிரயாணிகள் பேரூந்துகள், பாடசாலை மாணவர்கள் பேரூந்துகள் போன்றவற்றை செலுத்தும் சாரதி அனுமதிப் பத்திரங்களையும், எழுத்து பரீட்சை, வீதிப்பரீட்சை ஏதுமில்லாது மாற்றிக்கொள்ளலாம். இவை தொடர்பாக மேலதிக தகவல்களுக்கு உத்தியோகபூர்வமாக அழைக்க வேண்டிய மாகாண போக்குவரத்து அமைச்சின் இலக்கம் இதுவாகும்.

1-800-387-3445

இங்கு ஏனைய நாட்டு வாகனம் செலுத்திய அனுபவங்கள் ஒன்ராரியோ மாகாணத்தில் நிரூபிப்பது என்பதில் ஏனைய நாட்டு வாகனம் செலுத்திய அனுபவங்களின் சான்றிதழ்கள் என்பது நாட்டுக்கு நாடு வித்தியாசப்படும்.



அந்த நாட்டு சாரதி

தொடர்ச்சி 16ம் பக்கம்


SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







Fork Lift licence
From $75.00

Truck licence A-Z
From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618/416.913.9574

416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 170

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | 3 | |
| | | | | | | 4 | |
| 5 | | 6 | | | 7 | | 8 |
| | | | | | | 9 | |
| | | | | | | | 10 |
| | | | | | 13 | | |
| | | | | | | | |
| 12 | | | 13 | | | 14 | |

**இட - வல**

1. காந்தள் மலர்
4. கீறு
5. பிறகு
7. வழக்கம்
9. இசையில் ஆதார ஒலி (வல-இட)
11. சிவன்
12. தமிழீழத் தேசியப் பறவை
14. தமிழீழத் தேசிய மரம்

**மேல் - கீழ்**

1. கதை கூறும் நீண்ட செய்யுள்
2. மேடு
3. தமிழீழத்தில் உள்ள மரம் ஒன்று
6. படுப்பதற்கு உதவும்
7. மகளின் கணவன்
8. மறை (கீழ்-மேல்)
10. இளநகை
12. காது (கீழ்-மேல்)
13. உலோபி (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒ | ட் | டி | யா | ண | ம் | | உ |
| த் | | ஆ | | | க | வ | ரி |
| தி | ரி | | ல் | | க் | | |
| கை | த | த் | வ | | நோ | | தி |
| | | | ஆ | சை | | னை | ப |
| று | ன் | ம | | னி | ஆ | | தி |
| ன் | | | | ய | | க | னா |
| ஒ | ட் | ட | க | ம் | | டி | சே |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் December 28, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**169இல் வெற்றி பெற்றோர்**

1) G. Pathmakanthan, Donmills
2) R. Marina, Toronto


- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

(416) 267-0408 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

# தெரிவுகள் - Choices

## ஓடும் நீர் உறைவதில்லை 02

வணக்கம், வாசகர்களே!

கடந்த இதழில், ஒருவருது தற்போதைய வாழ்க்கை நிலைக்கு அவரது கடந்த காலத் தெரிவுகளே காரணங்களாக அமைகின்றன என்றும் அதனால் அதன் விளைவுகளுக்கு அவரே முழுப்பெ பாறுப்பாளராகிறார் என்றும் இந்த யதார்த்தமான உண்மையை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அவசியம் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

தெரிவுகள் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் தேவையில்லை. ஏனெனில் தெரிவுகள் தான் வாழ்க்கையின் அடித்தளம். ஒவ்வொரு நிமிடமும் அறிந்தோ அறியாமலோ பல விடயங்களை நாம் தெரிவு செய்து கொண்டே இருக்கிறோம். ஆனால் தெரிவுகள் எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதை அறிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும். ஒன்றை நாம் தெரிவு செய்வதன் அடிப்படை நோக்கமே நமக்குச் சாதகமான ஒரு பெறுபேற்றை அந்தத் தெரிவுமூலம் அடைய வேண்டும் என்பது தான்.

**KG Master**

இங்கே ஒரு தெரிவின் அடிப்படையானது தெரிவு செய்பவரின் அனுபவம், அறிவு, அந்தத் தெரிவின் எதிர்கால விளைவுகளைப் பற்றிய முன்னறிவு போன்ற பல காரணிகளுடன் எதை எப்படி எப்போது எதற்காகத் தெரிவுசெய்ய வேண்டும் என்பனவும் தீர்மானிக்கின்றன. அதாவது தெரிவு என்பது மனிதனை விலங்குகளிடம் இருந்து வேறுபடுத்தும் பகுத்தறிவு சார்பானதாக அமைய வேண்டும். இங்கே விலங்குகளுக்கு ஒன்றைத் தெரிவு செய்வதற்கான தகைமை இல்லையா என்ற கேள்விக்கு இடமுண்டு. ஒன்றைப் பகுத்து ஆராய்ந்து தெரிவு செய்வது மட்டும் பகுத்தறிவு ஆகாது. உதாரணமாக ஒரு நாயிடம் ஒரு துண்டு அப்பத்தையும் அதே வடிவிலான ஒரு கல்லையும் கொடுத்தால் அது அப்பத்தைச் சாப்பிட்டுவிட்டுக் கல்லைத் தவிர்த்துக் கொள்ளும். இவ்வாறு பகுத்து ஆராய்ந்து தனது தெரிவை மேற்கொள்வதால் நாய் பகுத்தறிவுடையதாகாது.

> வாசகர்களே ! வாழ்க்கை என்பது ஒரு புத்தகம். முகவுரைக்கும் முடிவுரைக்கும் இடையில் உள்ள அத்தியாவசியங்கள் எண்ணில் அடங்காதவை. எனது அத்தியாவசியங்களின் சில பக்கங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். இவை சம்பந்தமான உங்கள் கருத்துக்களை உள்வாங்குவதில் மிக ஆர்வமுடையவனாக உள்ளேன். உங்கள் கருத்துக்களை எனது மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். மின்னஞ்சல் - kgmaster@jansconsultin.com

எனவே பகுத்தறிவு என்றால் என்ன? பகுத்தறிவு என்பது தரப்பட்ட சூழ்நிலையொன்றில் அச்சூழநிலைக்கேற்ப தற்கால எதிர்கால விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் தெரிவுகள் மூலம் தன்னை மாற்றிக் கொள்ளக்கூடிய அறிவு தான் பகுத்தறிவாகும். ஏனெனில் தரப்பட்ட சூழ்நிலைக்கு மாறாக எமது தெரிவுகள் அமையும்போது எமக்கு உடனடியாக விலங்குப் பட்டம் சூட்டுவது வழக்கமாகும். நாயாக அலைகிறான். பன்றிபோலச் சாப்பிடுகிறான். மாடாக உழைக்கின்றான். கழுதைபோலக் கத்துகிறான் போன்றவை சில உதாரணங்களாகும்.

ஒவ்வொருவரும் தமது தெரிவுகளை மேற்கொள்ளும் பொழுது மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். நடைமுறையில் பலர் தெரிவுகளின் எதிர்கால விளைவுகள் பற்றிய சிந்தனையின்றி அவற்றை மேற்கொள்கிறார்கள். வாழ்க்கையில் அளவுக்கதிகமாகத் துன்பப்படுபவர்களுடைய அனுபவங்களைப் பார்த்தால் அவற்றிற்கான காரணம் எதிர்கால விளைவுகள் பற்றிய நுண்ணறிவற்ற கடந்த காலத் தெரிவுகளாகவே அமைந்துள்ளன.

தன்னைச் சார்ந்தவர்களிடையில் அல்லது சமூகத்தில் தன்னை மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்பதற்காக தனது இயல்புக்கு அப்பாற்பட்ட தெரிவுகளை மேற்கொண்டு அல்லற்படுபவர்கள் எண்ணிலடங்காதவர்கள். இவர்கள் அந்தப் போலியான கௌரவத்திற்காகத் தமக்குத் தேவையில்லா ஒன்றை மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக தமது வளங்களுக்கு அப்பால் செலவு செய்து தெரிவு செய்து கொள்வார்கள். இதன் விளைவுகள் மிகவும் பாதகமானதாக அமைவதைத் தவிர்க்க முடியாது. இப்போது உங்களுக்குத் தெரிந்த எத்தனையோ உறவினர்கள் அல்லது நண்பர்களின் உருவங்கள் உங்கள் மனக்கண்முன் தோன்றுகின்றனவா? உங்களுக்குத் தெரிந்த எத்தனைபேர் போலிக் கௌரவத்திற்காகத் தவறான தெரிவுகளை மேற்கொண்டு பல்வேறு சிக்கல்களுக்குள் அகப்பட்டுக் கொண்டார்கள் என்று எண்ணிப்பாருங்கள். இவர்களுள் நீங்களும் ஒருவர் என்பதை ஒப்புக்கொள்வீர்களாக இருந்தால் நீங்கள் ஓர் உத்தமர் மட்டுமல்ல இனிமேல் மேற்கொள்ளும் தெரிவுகள் அனுபவ அறிவு சார்ந்தவையாக அமையும் என்று எதிர்பார்க்கலாம். அதற்கு மாறாக மீண்டும் மீண்டும் உங்கள் தெரிவுகள் அர்த்தமற்றவைகளாக அமையுமாயின் கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரத்துக்கு அழுவதுபோல் அமைந்து விடும்.

ஒருசிலர் தம்மீது நம்பிக்கையின்மை காரணமாக அல்லது தம்மைப்பற்றிய தாழ்வு மனப்பான்மை காரணமாக தமது வாழ்க்கைக்கான தெரிவுகளை மற்றவர்களிடம் ஒப்படைத்து விடுவார்கள். இங்கே ஒரு உண்மையை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். அதாவது நமது தெரிவுகளை நாம் தெரிவு செய்தாலும் அல்லது அவற்றைத் தெரிவு செய்வதற்கு இன்னொருவரைத் தெரிவு செய்தாலும் தெரிவு செய்பவர் நாமாக இருப்பதால் அவற்றின் விளைவுகளுக்கு நாமே

> **தன்னைச் சார்ந்தவர்களிடையில் அல்லது சமூகத்தில் தன்னை மற்றவர்கள் மதிக்கவேண்டும் என்பதற்காக தனது இயல்புக்கு அப்பாற்பட்ட தெரிவுகளை மேற்கொண்டு அல்லற்படுபவர்கள் எண்ணிலடங்காதவர்கள்.**

பொறுப்புடையவர்களாகின்றோம். உதாரணமாக ஒரு தரகர் மூலம் நிறைவேற்றப்படும் திருமணத்திற்குப் பொறுப்பு நீங்களே. எனவே தெரிவுகள் உங்கள் வாழ்க்கையின் அடிப்படை-களாக அமைவதால் அவற்றை நீங்கள் ஏற்றுக் கொள்வதும் அவசியமானதாகும். சில சந்தர்ப்பங்களில் ஒன்றைத் தெரிவு செய்வது அவசியமானதாகவும் ஆனால் அதை எவ்வாறு தெரிவு செய்ய வேண்டும் என்பதில் அனுபவம் இல்லாமலும் இருப்பதால் அத்துறை சார்ந்த வல்லுனர்களிடம் தெரிவு செய்யும் உரிமையை வழங்க வேண்டியிருப்பதும் உண்டு. உதாரணமாக பங்குச்சந்தை முதலீடுகள் இருப்பினும் அவரது நடவடிக்கைகள் ஏற்படுத்தும் சாதகமான அல்லது பாதகமான விளைவுகள் உங்களையே சாரும் என்பதால் அவரைத் தெரிவு செய்த உங்கள் தெரிவுக்கு நீங்களே பொறுப்பாளராகின்றீர்கள்.

உங்கள் தெரிவுகள் கால தேச வர்த்தமானங்களுக்கமைய உங்களது சொந்த முடிவாக அமைதல் வேண்டும். ஏனெனில் உங்களது உண்மையான நிலை என்னவென்பதை உங்களைத் தவிர வேறு எவராலும் உணர்ந்து கொள்ள முடியாது. மற்றவர்களை உள்ளடக்கிய தெரிவு ஒன்றை நீங்கள் மேற்கொள்ள முயலும் போது மற்றவர்களது அபிப்பிராய



தொடர்ச்சி 21ம் பக்கம்


# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3



Educate your children to be original as well as competent to face the future with zest and self-confidence

பெரும்பாலான குழந்தைகள் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் ஆனால் ஒரு சில குழந்தைகளே கற்பிக்கப்படுகிறார்கள். ஏனெனில்...



**கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை**

*Many children are schooled*
*but few are educated.*
*Because...*

Education = Intelligence + Character

**Training Classes**
**for children 7 to 16 years old**

| | |
|---|---|
| Memory Power | Self-Confidence |
| Concentration | Self-Image |
| Listening Skill | Self-Discipline |
| Reading Skill | Patience |
| Goal Setting | Obedience |
| Team Work | Positive Thinking |
| Performance | Winning Attitude |
| Presentation Skill | Taking Responsibility |
| Time Managment | Leadership Qualities |



KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611 or (416) 725-5112
kgmaster@mysecondpower.com
www.mysecondpower.com

# ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 66

## மன்னிப்பு



உலகமெங்கும் நத்தார் பண்டிகைக் கொண்டாட்ட கேளிக்கைகளின் கோலாகலம் கண்ணைப் பறித்து காதைத் துளைக்கின்றது. பரிசுப் பரிமாற்றம் விருந்துபசாரம் எனப் பரபரக்கும் பலர் நத்தார் பண்டிகை பறைதட்டும் முக்கிய செய்தியைப் பற்றி சிந்திப்பது குறைவு. நத்தார் சரித்திரத்தின் நாயகன் யேசு கிறிஸ்து வாழ்ந்தது குறையக்காலம் தான். அவர் அதிகம் படிக்கவில்லை. ஒன்றையும் எழுதவில்லை, கண்டு பிடிக்கவில்லை. ஆனால் 2004 ஆண்டுகளிற்குப் பின்பும் அவரது ஆன்மீக சக்தி, சிறிதேனும் குன்றாமல் ஒளி வீசிப்பிரகாசிப்பது எதனால்? அவரது மன்னிக்கும் குணாதியசம் தான் யேசுபிரானை சாதாரணமானவர்களில் இருந்து வேறுபடுத்துகின்றது. தன்னைத் துன் புறுத்திக் கொடூரமாகச் சிலுவையில் அறைந்து கொன்றவரையே மன்னித்த அவரது பெருந்தன்மை எவ்வளவு மகத்தானது! இத்தனை ஆண்டு களிற்குப் பின்னரும் உயிர்த்துடிப்புடன் செயற் படும் அவரது அருள் வெள்ளம் எத்தனையோ பக்தர்களிற்கு ஆறுதல் அளிக்கின்றது.

அது சரி! கிறிஸ்து இறைவனின் புதல்வர். அவர் மன்னித்தார்! என்னால், சாதாரணமான என்னால், மன்னிக்கமுடியாமல் இருக்கிறதே. என்ன செய்வது எனும் உங்கள் அங்கலாய்ப்பு எனக்குக் கேட்கிறது. ஆம்! அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளில், பெற்றோர், தாரம், பிள்ளை, சம்பந்தி, உறவினர், அதிகாரி, அயலவர், சகபாடி, நண்பர், யாராவது உனது மனதைப் புண்படுத்தி, அந்த ரணம் சீழ்ப்பிடித்துக் கொதித்துக் கொண்டிருக்கும் நிரந்தர வலியைத் தீர்க்க முடியுமா? ஆம்! நிச்சயம் முடியும்! மன்னிப்பு என்பது ஒரு அருமருந்து. “இக்கொடிய குற்றத்தினால் எனக்கு இவ்வளவு வேதனை ஏற்படுத்தியவனை மன்னிக்க முடியுமா? முடியவே முடியாது அல்லவா,” எனும் உனது கேள்விக்கு “ஆம், மன்னிக்க முடியும்” என்பது தான் பதில். நாம் மட்டும் மனது வைத்தால், எம்மால் எதையும், எவரையும் நிச்சயம் மன்னிக்க முடியும்.

இந்த மன்னிப்பு சுலபமாய் வருவதல்ல. சீக்கிரம் வருவதுமல்ல. ஆனால் மன்னிப்பு, எம் ஒவ்வொருவராலும் செய்யக்கூடிய ஒன்றுதான். கொஞ்சங்கொஞ்மாக உங்கள் கசப்பான அநுபவங்கள், உணர்வுகளிலிருந்து உங்களை, நீங்களே விடுவித்துக் கொள்ளலாம். இந்த மாறிய மனப்போக்கு கொதித்துக் கொண்டிருக்கும் உங்கள் மனப்புண்ணைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கட்டாயம் மாற்றிக் குணமாக்கும். பொறுமையாக விடாமுயற்சியுடன் செயற்பட்டால் எந்தக் குற்றத்தையும் உங்களால் நிச்சயம் மன்னிக்க முடியும். இது கொஞ்சம் மெதுவாகத் தான் சாத்தியமாகும். உங்கள் பழைய வெறுப்புணர்ச்சி தலைதூக்கும் போதெல்லாம், கீழ்ப்படியாத பிள்ளையை அதட்டுவது போல, உங்கள் திமிருடன் அடம்பிடிக்கும் மனதை அதட்டி அடக்குங்கள். உங்கள் நினைவலைகளைப் பின்னோக்கிப் படரவிடுங்கள். உங்களைப் பாதித்த சம்பவத்திற்கு முன், உங்கள் மன்னிப்பு தேவைப்படாமலிருந்த காலத்தின்போது நீங்கள் எப்படிப்பட்டவராக இருந்தீர்கள். உங்கள் மனதை நோகப்பண்ணிய நபர், அவரின் சொல், செயல், அவர் செயலால் உமக்குள் ஏற்பட்ட உணர்வு, வலி, அதனால் உமக்கு ஏற்பட்டு உமது கண்ணை மறைக்கும் கோபம், யாவற்றையும் நினைவு கூருங்கள். இப்படிப் பழைய புண்ணைக் கிளறுவதால் உங்களுக்கு நிச்சயம் கஷ்டம், மனநோவு ஏற்படும். ஆனால் இந்த மன நோவே, மனப்புண்ணை மாற்றிடும் மருந்தாகவும் பயன்படும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தக் கோபத்தினால் உண்டாகும் இழப்புகள், சிதைந்த உறவுகள், பண, நேர விரயங்கள் போன்றவற்றுடன் தொடரப் போகும் பின்விளைவுகளைப் பற்றியும் சிந்தியுங்கள். இதனால் உங்களில் உண்டாகிய மாற்றங்கள், தாக்கங்கள், எதிர்மறை உணர்வுகள், நம்பிக்கையின்மைகள் பற்றி அலசுங்கள். அன்பு நிறைந்த, மகிழ்ச்சியான நபராய் விளங்கிய உங்களின் இந்த எதிர்மறை மாற்றம், இதனால் உங்களிடமிருந்து வெட்டி எறியப்பட்ட எந்த எந்த நல்ல குணாம்சங்களை மீண்டும் திரும்பிப் பெற்றிட உங்களுக்கு விருப்பம் என்பவற்றைப் பற்றியும் தீர்க்கமாகச் சிந்தியுங்கள்.

உங்களைப் பாதித்த சம்பவத்தைப் பூராவும் நினைவு கூர்ந்த பின், ஏன் இவ்வாறு நடக்க நேர்ந்தது என்பதையும் உட்பார்வையுடன் அலசி ஆராயுங்கள். உங்களை மற்றவர் இடத்தில் வைத்து சம்பவத்தை அவதானித்தால், பல காரணங்கள் புதிதாக உங்களுக்கு விளங்கும். சம்பந்தப்பட்டவரின் செயல்களின் காரணிகள், கெடுபிடிகள், அமுக்கங்கள், மன அழுத்தங்கள் யாவற்றையும் சீர்தூக்கிப் பாருங்கள். இத்தகையை கண்ணோட்டத்தின் போது பிரஸ்தாப சம்பவத்திற்கு உங்களின் உங்கள் சூழலிருந்தவர்களின் பங்களிப்பு என்ன என்பதும் உங்களுக்கு நன்கு விளங்கும். நீங்களும் உங்களின் பங்கைச் சரிவரச் செய்யவில்லை. உங்களின் எதிர்ப்பு, கோபம் உங்களை எங்கு கொண்டு போய் விடும் என்பதை உணரத் தவறிவிட்டீர்கள். சிலவேளை நடைபெற்றது உங்களுக்குத் தகுதியானதுதான் நடக்க வேண்டியது தான் என நீங்கள் நம்பியிருக்கக் கூடும். ஆகவே இவ்வாறு மற்றவர்களின் மேலும், உங்களின் மேலும் குற்றம் சுமத்தாதீர்கள். மற்றவரையும் மன்னிக்க வேண்டும். உங்களையும் நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்களைப் புண்படுத்தியவரின் கொள்கைகள், காரணிகள் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

உங்களது இப்படி மாறிய மனநோக்கு, பிரஸ்தாப சம்பவத்தைப் பற்றி, ஏன், எப்படி என்ற ஒரு தெளிவான புலப்பாட்டை நிச்சயம் கொடுத்திருக்கும். இப்போது உண்மையாக எதிரியை நீங்கள் மன்னிக்க விரும்புகிறீர்களா என்பதைத் தீர்மானியுங்கள். எமக்குள்ளும் எதிர்மறை உணர்வுகள் பலவற்றின் இருண்ட பிரதேசங்கள் நிறைய இருக்கின்றன. வெறுப்பு, கோபம், எரிச்சல், பொறாமை போன்ற குணங்கள் வாசஞ் செய்யச் செய்ய, எமக்கு அவை பழக்கமாகி, அவற்றில் ஒரு விருப்பமே வந்து விடும். ஆனால் மானிட மனம் நீதியை விரும்புகின்றது. மறக்கவே முடியாது, துன்பச் சூழலிருந்து மீளவே முடியாது என நீ நம்பிய சம்பவங்களின் பிடியிலிருந்து, மன்னிப்பதால் உன்னால் மீள முடிகிறது.

வஞ்சம் தீர்ப்பது, உங்களைத் தாக்கியவர் புதையுண்டிருக்கும் பாதாளத்திற்கு உன்னையும் வீழ்த்தி விடும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மன்னிப்பு, இன்னொருவருக்காக வேறொருவருக்காக நீங்கள் செய்வது அல்ல. மன்னிப்பு தான் சரி, என்பதற்காகவும் அல்ல. நீங்கள் உங்களுக்காக செய்வது மன்னிப்பு. உங்களைச் சிருஷ்டித்த இறைவன்

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617



**லலிதா புரூடி**

தொடர்ச்சி 22ம் பக்கம்




# உலர்வலயப் பழங்கள் (Tropical Fruits)

இவையாவன மாம்பழம், கொய்யாப்பழம், பப்பாசிப்பழம்... ஆகும். இந்த மாம்பழம் நன்கு கனிந்து பழுத்ததாக இருத்தல் அவசியம். இதில் அதிக நார்ச்சத்தும், உயிர்ச்சத்து 'சீ' ஊக்குச்சத்து 'பீரா கறொரின்' ஆகியவை உள்ளன. இவை உடம்பில் நோய் எதிர்பு சக்தியைக்கூட்டுவதுடன் இருதய நோய், புற்றுநோய் ஆகியவற்றையும் தடுக்க வல்லவை. இந்தப்பழம் திடீரென இரத்தத்தில் சீனிச்சத்தை கூட்டும் தன்மையுள்ளது. (High Glyicaemic Index) எனவே சலரோகம் உள்ளவர்கள் அதிகம் கனிந்த பழங்களை உண்பதை தவிர்க்கவேண்டும், ஆனால் காயை கறியாகவோ, வற்றலாகவோ, ஊறுகாயாகவோ உண்டு நற்பலன் பெறலாம்.

கொய்யாப் பழத்தில் கெட்ட கொழுப்பை அகற்றவல்ல ஊக்குச்சத்து 'பெக்ரின்' (Pectin) காணப்படுகிறது. அதிகநார்ச்சத்தும் இருப்பதால் மலச்சிக்கலை நீக்குவதுடன் இரத்தத்திலுள்ள கெட்ட கொழுப்பையும் (LDL) நீக்கவல்லது.


**டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D**
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
**'யோக சித்தர்' வவுனியா, இலங்கை**
Tele. - 416.291.3022




பப்பாசிப்பழத்தில் தாதுப்பொருள் 'மன்கனீஸ்' (Manganese) உள்ளது. இது ஜீரணசக்தியை கூட்டும் தன்மைவாய்ந்தது. இதிலுள்ள 'பீற்ரா கறொரின்' (Beta Carotene) நெறிகெட்ட வாயுக்கலன்கள் (Free Radicals) ஜீவகலன்களை தாக்குவதை தடுத்து நாடி, நாளங்களில் கொழுப்பு படிவதை தவிர்க்கவும் புற்றுநோய் கலன்களை அழிக்கவும் வல்லது. பப்பாசிப்பழத்தில் 'மன்கனீஸ்' (manganese) என்னும் தாதுப்பொருள் உள்ளது. இது ஜீரணத்தை ஊக்குவிப்பதுடன் நரம்பை பலப்படுத்தவல்லது. இந்தப்பழத்தில் அதிக நார்ச்சத்தும் இருப்பதால் மலச்சிக்கல் நீங்கும்.

**பனம்பழம் Palmyrah Fruit** - சூடான தேசத்தில் உள்ள பனம்பழத்தில் அதிக சத்து உண்டு. இதில் அதிக மாச்சத்தும், புரதச்சத்தும், உயிர்சத்துக்களும் உள்ளன. இதில் விசேடமான ஊக்குச்சத்துகள் இருக்கின்றன. இது ஓர் அற்புத காம விருத்தினியும் காயகற்பமுமாகும். (காயகற்பம் என்பது எந்த நோயையும் படிப்படியாக குணமாக்கி ஆயுளை விருத்தியடையச்செய்யும் தன்மை உள்ளது). ஆனால் இதைப்பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இது மூளையைப்பலப்படுத்தும். இந்த பனம்பழம், பனம் பண்டங்களுக்கு மலத்தை இழகச்செய்யும் தன்மை உண்டு என எமது மூதாதையர் கருதியுள்ளனர். ஆனால் இன்றைய விஞ்ஞான ஆராட்சி ஆரம்ப நிலையிலேயே உள்ளது. இதிலுள்ள விரும்பத்தகாத 'காறல்' சுவையில் நரம்பைப்பலப்படுத்தும் தன்மை இருக்கலாம் என்று எமது சித்தர்கள் கருதினர். இதனாலேயே எமது மூதாதையர் இந்தப்பழத்தில் செய்யப்பட்ட 'பனாட்டை' காலையில் பழஞ்சோற்றுடன் பிள்ளைகளுக்கு கொடுத்தனர் போலும். இது ஆயுள் விருத்திசெய்யும் முழுப்போஷாக்கு உள்ள பழமாக எமது மூதாதையர் கருதினர். அதன் காரணத்தாலேயே இதை பல பாகங்களிலும் பயிரிட்டு தமது கண்களைப்போல் பாதுகாத்து வளர்த்து அதற்கு 'பஞ்சந்தாங்கி' என்னும் சிறப்புப்பெயரையும் கொடுத்தனர். இது தேகத்திற்கும் மூளைக்கும் பலத்தை கொடுக்க வல்லது. இதைப்பற்றி தீவிர விஞ்ஞான ஆராட்சி செய்யவேண்டியது அவசியம்.

